சுடர் 16 கதிர் 3

# மிட்ஸ் ஐக்கிய சுடர்

ஜூலை - செப்டம்பர் 2025

தனிச்சுற்றுக்கு மட்டும்

மும்மாத இதழ்




04651 - 206075
94424 01665
MB
Merlin Backery
Merlin Backery
ICE CREAM & MILK BAR
NADAIKKAVU JUNCTION, CHATHENCODE POST,
PIN : 629153, K.K. DIST.
Prop. : T. Selvan


BRIGHT GROUP OF ACCADEMIES
UDYAM-TN-09-0011258
MANALI,PALAVILAI POST,KANAYAKUMARI,TAMIL NADU,INDIA,Pin -629 160.
Cell : 9842635876,9488602090
Music / Carnatic Music / Yoga / Silambam / Kalari / Movie / Drawi
உங்கள் குழந்தைகளும்
உலக சாதனை படைக்க வேண்டுமா...?
Admission Going On..
Diploma in Arts Bharathanatiyam
Diploma in Arts Western Dance
Diploma in Arts Folk dance
Diploma in Arts Drawing
Diploma in Arts Keyboard Music
Diploma in Arts Yoga
Diploma in Arts Carnatic Music
Diploma in Arts Flim Technology
Diploma in Arts Silambam
Diploma in Arts Audio Sound Engineering
Our Pride, Our Toppers - Bright Accademies
Managing Director : Master Dr. M. JUSTIN (World Record Holder)


Cell : 8903133609
Teacher
H.Selin Priya
L
SS MOTOR DRIVING SCHOOL
REG.NO.TN-09 0058301
Manali, Palavilai P.O, Choozhal
அன்புடையீர் :-
பெண்களுக்கு இரண்டு சக்கர வாகனம் மற்றும் நான்கு சக்கர வாகனம் மிகவும் சிறந்த முறையில் பயிற்சி கொடுத்து ஓட்டுநர் உரிமம் பெற்று தரப்படும், ஓட்டுநர் உரிமம் இருந்தும் சரியாக பயிற்சி பெறாதவர்களுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கப்படும்.

ஆதரவாளர்கள்
மேதகு ஆயர் Dr. வின்சென்ட் மார் பவுலோஸ்
தலைவர் - மிட்ஸ்

அருட்தந்தை. முனைவர் ஜெறோம் C.
இயக்குநர் - மிட்ஸ்

ஆசிரியர்
திரு. M.G. ஜோசப் பேட்ரிக் ஆன்றனி,
M.S.W., LL.B.,

ஆசிரியர் குழு
திருமதி. ஜெசீந்தா P
திரு. ஷாஜன் ஜோசப்
திரு. ஜோசப் பேட்ரிக் ஆன்றனி M.G
திருமதி. ஷீஜா J
திருமதி. சுனி V
திருமதி. ஷைலாராணி T
திருமதி. ஷிஜி A
திருமதி. ஜீவா B

தொகுப்பாளர் மற்றும் ஒருங்கிணைப்பாளர்
திருமதி. V. சுனி

வெளியீடு
மிட்ஸ்,
இடைவிளாகம் - கழுவன்திட்டை
குழித்துறை - 629 163, குமரி மாவட்டம்.

Ph : 04651-263390, 295690
Email : mids.marthandam@gmail.com
Website : mids.org.in

அச்சிட்டவர்
நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர்ஸ்,
நாகர்கோவில்

தனிச்சுற்றுக்கு மட்டும்




## உள்ளே ...

1. இயக்குநர் கடிதம் 2
2. எதிர்காலத்தை எளிதாக்கும் பண நிர்வாகம் 3
3. நேர மேலாண்மை 6
4. செயற்கை நுண்ணறிவு AI 8
3. மிட்ஸ் நிறைவாழ்வு சங்கம் 11
4. விருட்சம் - நுண்கடன் திட்டம் 11
5. குடும்ப வளர்ச்சித் திட்டம் 11
6. தளிர்கள் உலகம் 12
7. விண்ணைத்தொடு திட்டம் 12
8. கோல்பிங் 13
9. மரியன் இயக்கம் 13
10. மிட்ஸ் எழுவோம் இயக்கம் 14
11. மிட்ஸ் உறுப்பினர் பாதுகாப்புத்திட்டம் 14
12. மிட்ஸ் குடும்ப தினம் 14
13. உதவித்திட்டங்கள் 15
14. நிதி மேலாண்மை பயிற்சி 17
15. வெற்றியின் ரகசியம் 17
16. தூக்கி வீசும் கறிவேப்பிலையின் சுவை 17
17. அஞ்சலக திட்டங்கள் ஒரு கண்ணோட்டம் 19
18. பொன்மொழிகள் 19
19. திருமதி சஜிதாமேரி அவர்களின் பயிற்சி - பணி அனுபவம் 20
20. வெற்றியின் சிகரத்தை நோக்கி . . . திருமதி. மஞ்சு 22
21. குறுக்கெழுத்துப் போட்டி 23

# இயக்குநர் கடிதம் . . .



மிட்ஸ் வாசக தோழியர் தோழர்களே, வணக்கம்!

நமது அன்றாட வாழ்வில் எல்லாரும் கடினமாக உழைக்கிறோம். ஆனாலும் இன்னும் சிரமங்கள் தொடர்ந்துகொண்டே தான் இருக்கின்றன. கடின உழைப்பே நமது அடிப்படைப் பண்பாக இருப்பினும் நம்மை வீழ்த்துவது நேரத்தை மதிப்பதிலும், உழைத்து பெறும் பணத்தை கையாள்வதிலும் நாம் காட்டும் அலட்சியமே.

நமது அர்த்தமுள்ள வாழ்க்கை நேரத்தை மேலாண்மை செய்வதில் அடங்கியிருக்கிறது. நமது வாழ்வை இளமை முதல் முதுமை வரை யோசிப்பில் வைப்பதும், ஒருநாளின் காலை முதல் மாலை வரை முழுமையாக திட்டமிடுவதும், ஏன் இவ்விதழை எப்போது வாசித்து நிறைவுசெய்வது என்பது வரை நமது திட்டமிடலில் இருக்கவேண்டும் என்பது வாழும் காலத்தில் நாம் உருவாக்கும் நோக்கங்களை அடைய முக்கியமாகிறது. ஏற்றத்தாழ்வுகளால் கட்டமைக்கப்பட்டு, அழுகுரல்கள் கேட்கப்படா, கண்டுகொள்ளப்படா சமூகத்தில், உயர்ந்த நோக்கங்களுக்காக போராடும் நமக்கு திட்டமிடல் என்பது பன்மடங்கு அடிப்படை யாகிறது. நேரத்தை பலவற்றில் தொலைத்து விட்டதால், முக்கியமானவற்றைப் பணத்தால் ஈடுசெய்ய விழையும் மக்களாக காலம் நம்மை மாற்றிவிட்டது. குறைந்த நேரத்தில் அதிக நோக்கங்களை அடைய பணிநேரம், பயண நேரம், ஓய்வு போன்றவற்றை முறைப்படுத்தி உடல்நலனைக் காப்பது முறையே. நேரத்தை மதித்து கடைபிடிப்பவர் பிறரை மதிக்கிறார்; வரும் வாய்ப்புகளையும் தமதாக்குகிறார்.

விரும்பும் பலவற்றைப் பெற்றுக்கொள்ள பணம் நமக்கு துணைபுரிகிறது. அப்படியெனில், எதை விரும்புகிறோம் என்பதைக் கவனிக்க வேண்டும். நாம் விரும்புகிறோம் என்பதைவிட சமூகம் நம்மை விரும்ப வைக்கிறது. தனிமனித நுகர்வானது விளம்பரங்களாலும் தன்னைச்சுற்றி வாழும் மனிதரது நுகர்வாலுமே கட்டமைக்கப் படுகிறது. தமது தேவையைவிட பிறர் என்னைப்பற்றி என்ன கருதுவர் என்பதே நுகர்வை முடிவுசெய்கிறது. நான் என்ன உண்ணவேண்டும் என்பது கூட என்னைச் சுற்றி வாழ்பவர்கள் எதை உண்கின்றனர் என்பதை வைத்தே தீர்மானிக்கப் படுகிறது. நமது அழகியல் பார்வைக்கும் நமது பொருளாதார மேலாண்மைக்கும் அதிகத் தொடர்பு இருக்கிறது. ஒருபொருள் வாங்க அல்லது ஒன்றை கட்டியெழுப்ப நமது மற்றும் சூழல் தேவையை விட, கவர்ச்சிமிகு அல்லது சொகுசு பிராண்ட் பொருட்களே நமது பட்டியலில் வந்து விழுகின்றன. இதன் விளைவாக, பெரும் உழைப்பினால் குறைந்த தேவைகளை மட்டுமே நாம் நிறைவுசெய்யும் நிலைக்கு தள்ளப்படுகிறோம். முக்கிய, தொடர் தேவைகளுக்கு நமது திட்டமிடல் மற்றும் சேமிப்பு இன்றியமையாததாக மாறுகிறது.

அன்பு வாசகரே, நீடித்த, பொருள்மிக்க மகிழ்ச்சியைப்பெற மேலாண்மை செய்தால் மட்டுமே நம்மால் பெற்றுக்கொள்ள முடியும். மிகக்குறைந்த அளவிலே கிடைக்கப்பெறும் நமது வாழ்க்கைக் கால அளவையும் அதில் நாம் உழைத்துப் பெறும் பணத்தையும் நிறைவாக சேமித்து, தொடர் தலைமுறையை காக்கும் செயல்பாடுகளில் ஈடுபடுவோம். தவறான பழக்கவழக்கங்களால் நமது ஆரோக்கியம் மட்டுமல்ல, இயற்கைச் சுற்றுச்சூழல் வளங்களையும் நாம் கெடுத்துவிட்டோம். ஆகவே, நமது நேரநிர்வாகமும் வள நிர்வாகமும் நம்மை உயர்மனிதர்களாகச் செதுக்கட்டும்! வரும் தலைமுறையை காக்கட்டும்!

**அருட்தந்தை. முனைவர் ஜெறோம் C.**
இயக்குநர் - மிட்ஸ்

வேலையில் தீவிரமாக இறங்கி இருப்பதால் நேரம் போவது தெரியாமல் போய்விடலாம்.
வேலையின் தன்மை கடினமாக இருந்தாலும் நேரம் உங்களுக்கு நெருப்பாகத் தோன்றும்.

# எதிர்காலத்தை எளிதாக்கும் பண நிர்வாகம்



"எப்படிப்பட்ட நபராலும் பணம் சம்பாதித்து விடலாம் ஆனால் ஒரு புத்திசாலியால் மட்டுமே அதை காப்பாற்ற இயலும்"

பண நிர்வாகம், அதை திறம்பட நிர்வகிப்பது என்பது ஒரு அற்புதமான கலை தான். பணத்தின் வரலாறு என்பது பொருட்கள் மற்றும் சேவைகளின் பரிமாற்றத்திற்கான ஒரு அடையாள பொருள். பணம் என்பது பண்டமாற்று முறையை போல நேரடியாகவும் இல்லாமல் மறைமுகமாகவும், பொதுவாகவும் இந்த செயல்பாடுகளை நிறைவேற்றுவதற்கான ஒரு வழியாகும்.

**பணம் தோன்றிய வரலாறு**

பணம் கி.மு. 6-ஆம் நூற்றாண்டின் தொடக் கத்திலேயே இருந்து வந்ததாக வரலாற்றுச் செய்திகள் கூறுகின்றன. அதாவது, மௌரிய பேரரசுகாலத்தில் யானை, சிங்கங்களை தாங்கிய வெள்ளிக்காசு புழக்கத்தில் இருந்தது.

**பணத்தின் உருவாக்கம்**

ரூபாய் என்ற சொல், சமஸ்கிருத சொல்லான ரூபா என்பதிலிருந்து வந்துள்ளது. இதற்கு வார்க்கப்பட்ட வெள்ளிக்காசு என்று பொருள்படும். பணத்தின் உருவாக்கம் குறித்த வரலாறு மிக பழமையானது என்றால் அதனை நிர்வகிக்க தொடங்கிய சிந்தனைகளும் மிகவும் பழமை வாய்ந்தனவையே என்ற அடிப்படையில் தற்போதைய பணம், அதன் நிர்வாகம் குறித்த சிந்தனைக்குள் புகுவது நல்லது.

**பணத்தின் முக்கியத்துவம்**

நாம் ஒவ்வொருவரும் அன்றாடம் ஓடிக்கொண்டிருப்பது, ஒரு சாண் வயிற்றை நிரப்ப என்று பழமை சொல் சொல்லப்பட்டாலும், அதன் அடிப்படை, கூடவே இருப்பது பணம், பணம் சம்பாதிப்பது தான். பணம் என்னடா பணம், குணம் தானடா நிரந்தரம் என்றாலும் பணத்திற்கான முக்கியத்துவம் முன்பை விட தற்போது அதிகமாக காணப்படுகிறது.

**பண நிர்வாகம்**

பணத்தை சம்பாதித்தாலும் அதை நிர்வகிப்பது குறித்து எல்லா மதங்களும் நீதியான முறைகளை கற்றுத்தருகிறது. உதாரணமாக திருவிவிலியத்தில் நேர்மையற்ற பணம் குறைந்து விடும். ஆனால், கொஞ்சம் கொஞ்சமாக பணத்தை சேமிப்பவன் அதை வளர்க்கிறான். (நீதிமொழிகள் 13:11) என்று கூறப்பட்டுள்ளது. பணத்தை சேமிப்பவர்களுக்கு ஒருபோதும் போதுமானதாக இருக்காது. செல்வத்தை நேசிப்பவர்களுக்கு ஒருபோதும் தங்கள் வருமானத்தில் திருப்தி ஏற்படாது. இதுவும் அர்த்தமற்றது.

பல துன்மார்க்கரின் செல்வத்தை விட நீதிமானுக்கு இருக்கும் கொஞ்சமே நல்லது என்கிறது திருப்பாடல் 37:16-17. அதுபோல, திருவள்ளுவர் தன்னுடைய 101-ம் அதிகாரம் 1004-ம் பாடலில்

**எச்சமென்று என்எண்ணுங் கொல்லோ ஒருவரால்**
**நச்சப் படாஅ தவன்**

அதாவது, பிறருக்கு உதவியாக வாழாத காரணத்தால் ஒருவராலும் விரும்பப்படாத செல்வமுடையான் தான் இறந்த பிறகு தன்னை நினைவுபடுத்தி நிற்கப்போவது என்று எதை எண்ணுவானோ? என்று கூறியுள்ளார்.

**பண நிர்வாகம் ஒரு கலை**

ஏற்கெனவே சொன்னது போல, பண நிர்வாகம் என்பது ஒரு கலை. இருக்கும் பணத்தை எப்படி சேமிப்பது, எப்படி செலவு

வருமானத்தை உயர்த்திக் கொள்ளுங்கள் தன்மானம் தானாகப் பிறக்கும்.

செய்வது, எங்கு சேமிப்பது போன்ற அறிவினை நாம் அனுபவசாலிகள், பத்திரிகைகள், புத்தகங்கள், நல்ல நண்பர்கள், பண நிர்வாக நிபுணர்கள் இவர்களிடமிருந்து ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளலாம்.

எனக்கு மிக நெருங்கிய நண்பர் ஒருவர் அடிக்கடி சொல்வார் பணம் சம்பாதிப்பதை விட, பணத்தை செலவு செய்ய அதிக அறிவு வேண்டும் என்பார். அந்நாட்களில் அது புரியாவிட்டாலும், இந்நாட்களில் அதன் ஆழமான உண்மை புரிகிறது.

பணம் வாழ்க்கையின் ஒரு மன அழுத்தமான பகுதியாக இருக்கலாம். செலவுகளை செலுத்த போதுமான அளவு பணத்தை சேர்க்கலாம். என்றாலும், பணத்தின் மீது பேராசை கொள்ளலாகாது என்று எபிரேயர் 13.5 நமக்கு சொல்கிறது.

### பண நிர்வாக குறைபாடுகளால் ஏற்படும் விளைவுகள்

பணப்பிரச்சனைகளால் நடக்கும் தற்கொலைகள், மரணங்களை குறித்து அன்றாட செய்திகளில் நாம் பார்க்கிறோம். இவற்றை ஆழமாக அலசிப் பார்த்தால் பல தற்கொலை மரணங்கள் பணத்தை சரியான முறையில் நிர்வகிக்க தெரியாததால் நடந்தேறியது என்று கூறலாம்.

ஒரு சாதாரண மனிதரோ அல்லது பெரும் பணக்காரரோ, மாதம் பத்தாயிரம் ரூபாய் வருமானம் உள்ளவரோ, அல்லது மாதம் ஒரு இலட்சம் ரூபாய் வருமானம் உள்ளவரோ எவராக இருந்தாலும் பணத்தை சரியாக நிர்வகிக்க தெரிந்தால் எவரும் ஏழையாக மாட்டார். பணத்தை சரியாக நிர்வகிக்க தெரியாத ஒரு நபரால் அதனை நிலைநிறுத்திக் கொள்ள இயலாது.

### பண பங்கீட்டு முறை - Harv Eker

பண நிர்வாகம் குறித்து இன்று பல்வேறு நிபுணர்களால் பலதரப்பட்ட கருத்துகள் தரப்பட்டாலும், Harv Eker என்ற நிபுணர் தனது 14 வருட ஆராய்ச்சிகளின் அடிப்படையில், மிக எளிமையாக 6 விதமான பண பங்கீடுகளை குறித்து 'கோடீஸ்வரர்களின் சிந்தனை இரகசியங்கள்' எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

### நிதி மேலாண்மை அமைப்பு - Six Jar Method

உங்கள் வருமானம் மாதம் ரூபாய் பத்தாயிரமாக இருந்தாலும் சரி, ஒரு இலட்சமாக இருந்தாலும் சரி அந்த வருமானத்தை கொண்டு சரியான முறையில் நிர்வகிக்க கீழ் கொடுக்கப்பட்டுள்ள Harv Eker - ன் Jar Method உங்களுக்கு பயனுள்ளதாக அமையலாம். இந்த முறையில் ஆறு ஜாடிகள் தேவைப்படும். அவற்றின் பயன்பாடுகள் குறித்து கீழே காண்போம்.

#### முதல் ஜாடியின் முக்கியத்துவம்

இந்த ஜாடியில் உங்கள் மாத வருமானத்தின் 55% பணத்தினை ஒதுக்குங்கள். இந்த பணமானது நமது அன்றாட குடும்ப தேவைகள் மற்றும் அத்தியாவசிய தேவைகளுக்கானது. இதை விட்டு நாம் மாற முடியாது. உதாரணமாக, மளிகை பொருட்கள், இதர உணவு பொருட்கள், மின்சார மற்றும் குடிநீர் கட்டணங்கள், எரிவாயு கட்டணம் என்று குடும்பத்திற்கு தேவையானவற்றை நாம் சந்திக்க இந்த நிதி ஒதுக்கி வைக்கப்பட வேண்டும்.

#### இரண்டாவது ஜாடியின் முக்கியத்துவம்

இந்த ஜாடியில் உங்கள் மாத வருமானத்தின் 10% பணத்தை ஒதுக்க வேண்டும். ஏனென்றால் வருங்கால மற்றும் எதிர்கால தேவைகளை (Long Term Plan) சந்திக்க இந்த தொகை உதவும். உதாரணமாக, நிலம் வாங்குதல், வீடுகட்டுதல், திருமணம், கல்வி போன்ற தேவைகளுக்காக நாம் சேமிப்பது. இந்த சேமிப்பை தகுந்த நபர்களிடம் ஆலோசித்து தகுந்த நீதியான வருமானம் தரும் இடத்தில் முதலீடு செய்வது நல்லது.

#### மூன்றாவது ஜாடியின் முக்கியத்துவம்

இந்த ஜாடியில் உங்கள் மாத வருமானத்தில் 10% சேமிக்க வேண்டும். இது ஒரு செலவு தான் என்றாலும், இது எதற்காக என்றால் சுய வளர்ச்சி (Self Development) காரணங்களுக்காக சேமிக்கப்படும் தொகையாகும். உதாரணமாக ஒரு துறையில் வேலை பார்ப்பவர் அத்துறை சார்ந்த குறுகிய கால கல்வியை கற்றுக் கொண்டு அடுத்த நிலைக்கு செல்ல பயன்படும். முதற்பார்வையில் இது செலவு என்றாலும், இது அடுத்த கட்டத்திற்கான

முதலீடு தான் அல்லது நாம் செல்லும் அலுவலகத்திற்கு இன்னும் நன்றாக செல்ல, நல்ல உடை வாங்க, நல்ல காலணிகள் வாங்க, அல்லது ஒரு நல்ல கைக்கடிகாரம் வாங்க என்ற செலவுகளுக்காக, குறிப்பாக என்னை செதுக்குவதற்காக செலவிட வேண்டி சேர்த்து வைக்க வேண்டிய சேமிப்பு. அநேகர் இந்த செலவை செய்ய மறுப்பதால் அவர்களது சுய வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. இதனை நாம் செலவிட அஞ்சினால் நாம் சம்பாதிப்பதே அர்த்தமற்றதாகிவிடும்.

**நான்காவது ஜாடியின் முக்கியத்துவம்**

இந்த ஜாடியில் உங்கள் மாத வருமானத்தில் 10% சேர்க்க வேண்டும். இந்த தொகையை ஒரு குறிப்பிட்ட காலம் வரை எடுக்கக்கூடாது. இது ஒரு நீண்டகால திட்டம். உதாரணமாக, இதனை ஒரு ஓய்வு கால திட்டம் (Retirement Plan) என்று சொல்லலாம். நமது சொந்தங்கள் மிகச் சிறந்த பணக்காரர்களாக இருப்பதும் அல்லது நமது பிள்ளைகள் நம்மைப் பார்த்து கொள்வார்கள் என்ற நம்பிக்கை இருப்பதும் நல்லது தான் என்றாலும், நாம் இருக்கும் நாள் வரை சிறு சிறு தேவைகளை எதிர்கொள்ள இந்த ஜாடியிலுள்ள பணம் நமக்கு உதவும்.

**ஐந்தாவது ஜாடியின் முக்கியத்துவம்**

ஐந்தாவது ஜாடியில் உங்கள் மாத வருமானத்தில் 10% ஒதுக்கப்பட வேண்டும். இந்த ஜாடிக்கு play Jar என்று பெயர். இதனை நமது உடல்ஆரோக்கியம், உள்ள ஆரோக்கியம், பொழுதுபோக்கு போன்ற தேவைகளுக்காக பயன்படுத்தலாம். உதாரணமாக, சில விளையாட்டு உபகரணங்கள் வாங்க, மாத சந்தா கட்ட, திரைப்படம் பார்க்க, வெளியே சென்று சாப்பிட, சுற்றுலா செல்ல போன்ற தேவைகளுக்கு இந்த ஜாடியில் பணம் சேமிக்க வேண்டும். ஆனால் இதில் இரண்டு முக்கியமான விஷயங்கள் உண்டு. என்னவென்றால், இந்த செலவை அந்தந்த மாதத்திலேயே செலவு செய்து முடித்து விடுங்கள். இரண்டாவது இந்த ஜாடியில் உள்ள தொகைக்குள் உங்கள் செலவை நிறுத்தி விடுங்கள். மற்ற ஜாடிகளுக்குள் கை வைத்தல் கூடாது.

**ஆறாவது ஜாடியின் முக்கியத்துவம்**

இந்த ஜாடியில் உங்கள் மாத வருமானத்தில் 5% ஒதுக்குங்கள். இந்த தொகை உங்களுக்கானதல்ல. மற்றவர்களுக் கானது. அதாவது ஏழைகளுக்கு தானமாக, முதியவருக்கு, நோயுற்றவருக்கு கொடுப்பதாக இருக்கலாம். அல்லது திருமணம், புதுமனைப் புகுவிழா, சடங்கு நிகழ்வுகள், முதல் திருவிருந்து, குழந்தை பிறத்தல் போன்ற நிகழ்வுகளுக்காக பயன்படுத்தலாம்.

இந்த விதிகளை எந்தவித தளர்வுமின்றி நம் வாழ்நாள் முழுவதும் தொடர்ச்சியாக கடைபிடித்து வந்தால் நிச்சயம் பணத் தட்டுப்பாடு நம் பக்கம் அணுகவே அணுகாது. கையில் இருக்கும் போதும், காலி செய்யும் போதும் தெரிவதில்லை. தேவைக்காக பிறரிடம் கைநீட்டி நிற்கும் போது தான் தெரியும் பணத்தின் அருமை என்னவென்று. எனவே வருமானத்துக்கு ஏற்றவாறு திட்டமிட்டு பணத்தை நிர்வகிப்போம். மனமகிழ்வோடு வாழ்வோம்.

**திரு. ஜோசப் பேட்ரிக் ஆன்றனி**
திட்ட ஒருங்கிணைப்பாளர்



**என்ன மனிதன் இவன்!**

செல்வத்தை சம்பாதிப்பதற்காக ஆரோக்கியத்தை இழக்கிறான் பின்னர் ஆரோக்கியத்தை மீட்க செல்வத்தை அழிக்கிறான்.

எதிர்காலத்தை மனதில் வைத்து நிகழ்காலத்தை வீணாக்குகிறான் பின்னர் எதிர்காலத்தில் தன் கடந்த காலத்தை நினைத்து அழுகிறான்.

மரணிக்கவே போவதில்லை என்பது போல் வாழ்கிறான். பின்னர், வாழவே இல்லை என்பது போல மரணித்து விடுகிறான்.

மன்னிப்பு என்பது துணிச்சல் மிக்கவர்களின் நற்பண்பு – இந்திரா காந்தி

# நேர மேலாண்மை



"காலத்தின் மதிப்பு தெரிந்தால்,
வாழ்வின் மதிப்பு தெரிந்து விடும்"

உலகில் மனிதர்கள் ஆட்சி செய்யத் துவங்கிய காலத்திலிருந்து தற்போது வரை ஒரு நாளைக்கு 24 மணி நேரம் தான். ஆனால் சமீபகாலமாக தான் எனக்கு நேரமில்லை, நான் ரொம்ப பிஸி, பிறகு பார்க்கலாம், என்கிற வார்த்தைகள் நமது காதுகளில் விழுகிறது. நன்கு யோசித்து பார்ப்போம். நமது தாத்தா என்றாவது எனக்கு நேரமில்லை என்று சொல்லியிருக்கிறாரா? நேரத்தை வீணாக்குவது என்பது, வேண்டாத செயலை செய்வது மட்டுமல்ல, வேண்டிய செயலை செய்யாமல் இருப்பதும் தான்.

**தொழில்நுட்ப வளர்ச்சி**

இன்றைய காலகட்டத்தில் தான் நமது நேரத்தை குறைக்கும் சாதனங்கள், கருவிகள், தொழில்நுட்பங்கள் வந்திருக்கின்றன. நமது பணியை அவை சுலபமாக்கி நம் நேரத்தை மிச்சமாக்குகின்றன. அப்படியானால், இப்பொழுது நமக்கு அதிக நேரம் தானே இருக்க வேண்டும். ஏன் நமக்கு நேரமே இல்லை, நேரம் ஏன் போதவில்லை? உண்மையில் இதை நாம் யோசிப்பதில்லை. ஒரு காலத்தில் சென்னை செல்ல வேண்டுமானால் பல நாட்கள் பயணம் மேற்கொள்ள வேண்டும். ரயில்கள் ஓட துவங்கிய பின் அது ஒரு நாள் பயணமானது. தற்போது ஒரு மணி நேரத்திற்குள்ளாக விமான பயணத்தில் நாம் சென்னை சென்று விடலாம்.

**விரல் நுனி விசையில் விரியும் உலகம்**

முற்காலத்தில் பம்பாய் அலுவலகத்தை தொடர்பு கொள்ள வேண்டுமெனில் டிரங்க் கால் புக் செய்ய வேண்டும். பிறகு அழைப்பு கிடைக்க வேண்டும். ஆனால் இப்போது, விரல் நுனி விசையில் விரிகிறது உலகம் என்றாலும் நமக்கு நேரமில்லை. ஆக, உண்மையில் நேரமில்லை என்பது ஒரு மாயை. அதை உடைத்தெறிந்து விட்டோமானால், 24 மணி நேரமும் நமக்கு அமுத சுரபி தான்.

**நிறுவன வளர்ச்சியில் நேர மேலாண்மை**

ஒரு நிறுவனத்தின் செயல்பாடுகள் இரண்டு தான். ஒன்று வழக்கமான செயல்பாடுகள், மற்றொன்று மேம்பாட்டு செயல்பாடுகள். பொதுவாக ஒரு நிறுவனம் வழக்கமான செயல்பாடுகளுக்கு 60 சதவீத நேரத்தையும், மேம்பாட்டு செயல்பாடுகளுக்கு 40 சதவீத நேரத்தையும் ஒதுக்க வேண்டும். ஆனால் தவறான நேர ஒதுக்கீட்டு திட்டமிடல் காரணமாக 100 சதவீத நேரத்தையும் வழக்கமான செயல்பாடுகளுக்கு ஒதுக்க வேண்டியுள்ளது. இதனால் வளர்ச்சி செயல்பாடுகள் தடைபடுகிறது.

முக்கியமாக, ஒரு குடும்பத்தின் அல்லது நிறுவனத்தின் தலைவராக திகழும் நபருக்கு நேரமின்மை என்பது உடனடியாக தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனையாகும். ஏனெனில் அது அவர்களின் எதிர்கால செயல்பாடுகளை முடக்கி விடுவதுடன் நிறுவன வளர்ச்சியையும் பாதித்து விடும்.

**நேர ஒதுக்கீட்டின் முக்கியத்துவம்**

நேர ஒதுக்கீடு என்பது செயல்பாடுகள் சார்ந்ததாகவும் மற்றும் நபர்கள் சார்ந்ததாகவும் உள்ளது. அதனை நாம், உடனே செய்ய வேண்டியது, பிறகு செய்து கொள்ளலாம், எப்போது வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம் என்று வகைப்படுத்த வேண்டும். இவ்வாறு வகைப்படுத்திய பின்பு உடனே செய்ய வேண்டிய செயல்பாடுகளின் விகிதம் மிக குறைவாக இருப்பதை நாம் கண்டு கொள்ளலாம். முற்றிலும் நிராகரித்து விடக்கூடிய பணிகள் அதிகம் இருப்பதையும் நாம் அடையாளம் காணமுடியும். எதை எப்போது செய்வது, எந்த செயல்களுக்கு முக்கியத்துவம் அளிப்பது, எந்த செயல்களுக்கு முழுக்கவனம் செலுத்துவது என்ற திட்டமிடல் இல்லாத போது நமது நேரம் தேவையில்லாமல் வீணாகிறது.

மனிதர்கள் பணத்தை விரும்புவது பணத்துக்காக அல்ல, அவர்கள் அதைக் கொண்டு வாங்கக் கூடியவற்றிற்காகவே.
- ஆடம் ஸ்மித்

நபர்கள் சார்ந்த நேர ஒதுக்கீட்டை பார்க்கும் போது யார், யாருக்கு எந்த பணி ஒதுக்கப்பட்டுள்ளதோ, அந்த பணியை அவரவர் சரியாக செய்ய வேண்டும். நேரத்தின் மதிப்பு என்பது நபருக்கு நபர் வேறுபடும். அலுவலக உதவியாளரின் 1 மணி நேரத்தை விட அதிகாரியின் 1 மணி நேரம் மதிப்பு வாய்ந்தது. அதிகாரியின் 1 மணி நேரத்தை விட மேலாளரின் 1 மணி நேரம் மதிப்பு வாய்ந்தது. தங்களுக்கு கீழ் நிலையில் உள்ள அதாவது, அலுவலக உதவியாளரின் வேலையை மேலாளரோ அல்லது சேர்மனோ செய்வது முற்றிலும் தவறானது. பல நிறுவன தலைவர்கள் அதைத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு செய்யும் பட்சத்தில் நிறுவன வளர்ச்சிக்கான முயற்சிகள் தடைபடுகின்றன. தங்களுடைய அதிகாரிகள் மற்றும் ஊழியர்களை அவர்களின் தரநிலைக்கும் குறைவான பணிகளை செய்யச் சொல்வது, தானாகவே அது போன்ற வேலைகளை எடுத்துச் செய்வது இவை இரண்டுமே நேர மேலாண்மைப்படி தவறானதாகும். குடும்பங்களிலும் இதுபோன்றே அவரவர் கடமையை மேலாண்மை செய்வது நலம்.

**நேர ஒதுக்கீட்டுக்கான திட்டமிடுதல்**

ஒரு அலுவலக அதிகாரிகள் சந்திப்பின் போது என்ன பேச வேண்டும்? எதைப்பற்றி பேச வேண்டும்? எவ்வளவு பேச வேண்டும் என்கிற தெளிவான திட்டமிடுதலுக்குப் பிறகு பேசும் போது நமக்கு நேரம் மிச்சமாகும். இல்லையென்றால், அது மீட்டிங்காக இல்லாமல் சாட்டிங்காக மாறி விடும். அதுபோல 2 கோடி மதிப்புள்ள திட்டப்பணிகள் நடந்து கொண்டிருக்கும் நேரத்தில் 20 ரூபாய் மதிப்புள்ள தொலைந்து போன பேனாவை ராசியான பேனா என்று ஒரு மணி நேரம் தேடிக் கொண்டிருப்பது நேரத்தை வீணடிப்பதாகும்.

நேரத்தை சரியாக திட்டமிடாத போது, இன்னொரு சிக்கலும் இருக்கிறது. நம் சமூகத்தில் பலரும் கடைசி நேர மனிதர்களாகவே இருக்கிறார்கள். பள்ளி காலத்தில் இருந்தே தேர்வு நேரத்தில் மட்டுமே பாடங்கள் படிப்பது, மணி அடிக்கும் போது தான் 10 மார்க் விடைக்கு மாய்ந்து மாய்ந்து எழுதுவது என நேரம் தவறி செய்யும் செயல்கள் பெரியவர்கள் ஆனாலும், கடைசி நாளில் வரி கட்டுவது, மின்சார பில், போன் பில் கட்டுவது என தொடர்ந்து கொண்டிருக்கிறது. பல இடங்களிலும் கடைசி நாளில் கூட்டமாக காணப்பட இதுதான் காரணமாக உள்ளது.

**நேரத்தை வீணாக்குவதை தவிர்க்க என்ன செய்யலாம்?**

ஒரே ஒரு நாள் வீட்டின் மின்சாரத்தை நிறுத்தி விடுவோம். கைப்பேசி, தொலைக்காட்சி, கணினி, ஹோம் தியேட்டர், வாட்ஸ் ஆப், எஸ்.எம்.எஸ். அனைத்தையும் பயன்படுத்துவதை நிறுத்திக் கொண்டால் என்ன ஆகும் என்று நினைத்து பார்ப்போம். அந்த நேரத்தில் தான் பல பணிகள் நம் நினைவிற்கு வரும். வயதான அம்மாவுடன் சூடான ஒரு காபி, மனைவி, குழந்தைகளுடன் உறவாடுதல், தோட்ட வேலைகள், வியாபார மேம்பாட்டிற்கான புதிய திட்டங்களின் உருவாக்கம் என எல்லாமே சாத்தியப்படும். இவ்வளவு பணிகளை செய்த பிறகும் உங்களுக்கு நிறைய நேரமிருக்கும். தவறவிட்ட நேரத்தை திரும்ப பெற முடியாது. எனவே நேரத்தை வீணாக்காமல் திட்டமிட்டு திறம்பட வாழ்வோம்.

**திருமதி. ஜெசீந்தா,** MSW
ஒருங்கிணைப்பாளர்



## வாழ்த்துகிறோம்

### புத்தக வெளியீடு

மிட்ஸ் அளவில் "**குமரி புற்றுநோய் பாராமரிப்பு**" கையேடு வெளியிட உதவிய திருமதி. வினிதா மற்றும் திருமதி. ஜெசீந்தா அவர்களுக்கு மிட்ஸ் ஐக்கிய சுடர் இதழ் வாயிலாக வாழ்த்துக்களுடன் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

நீங்கள் ஒருவரின் வாழ்வில் விளக்கேற்றினால் அது உங்கள் பாதையையும் பிரகாசமாக்கும் – கௌதம புத்தர்.



# செயற்கை நுண்ணறிவு AI


Dr. லியோ பிரைட் சிங்
பேராசிரியர்
மார் எப்ரேம் பொறியியல் கல்லூரி,
இலவுவிளை




செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) என்பது மனிதர்களின் நுண்ணறிவினை பிரதி பலிக்கக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்ட செயற்கையான அமைப்பாகும். இந்த செயற்கை அமைப்பானது சூழல்களை உணர்ந்து கொண்டு பகுத்தாய்வு செய்து தொழில் துறையில் ஏற்படும் பல்வேறு பிரச்சனைகளை தீர்க்கவும், மனிதனுடைய மொழியை புரிந்து கொண்டு பல நிலைகளில் செயல்படவும் செய்கிறது. இந்த தொழில்நுட்பத்தின் மூலம் மனிதர்களுடைய குறுக்கீடு இல்லாமல் இயந்திரங்கள் தன்னாட்சி பெற்றவையாக சூழல்களை புரிந்து கொண்டு சுயமாக, துல்லியமாக முடிவெடுத்து செயல் படுத்துவதையும் நாம் காணமுடிகிறது. கற்றல் துவங்கி அனைத்து தொழில்துறைகள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் பரிமாற்றம் என அனைத்திலும் செயற்கை நுண்ணறிவு தடம்பதித்துள்ளது. எனவே, இதைப்பற்றிய புரிதலை நாம் பெறவேண்டியது இன்றைய கட்டாய தேவையாகும்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப மானது மனித நுண்ணறிவு தேவைப்படும் பணிகளை இயந்திரங்கள் தானாகவே செயல்படும் வகையில் மாற்றியமைத்துள்ளது. இயந்திரங்கள் அதனுடைய செயல்பாட்டு அனுபவத்திலிருந்து தரவுகளை பெற்று சுயமாக செயற்கையாக கற்றுக்கொண்டு புதிய உள்ளீடுகளுக்கு ஏற்றவகையில் தானாக மனிதர்களை போன்று பணிகளை செய்ய வழிவகை செய்கிறது. இன்று நமது வாழ்வின் ஓர் அங்கமாக, ஒருங்கிணைந்த பகுதியாக மாறியுள்ளது. நம்முடைய வாழ்க்கை சூழலையே மாற்றியமைத்துள்ளது.

ஒரு குறிப்பிட்ட வேலையைப் பல நிலைகளில் செய்வதற்கும், மனிதனை போன்ற நுண்ணறிவுடன் பகுத்தறிவு பெற்று செயல்படுவதற்கும் ஏற்ற வகையில் இத்தொழில் நுட்பம் பயன்பட்டு வருகிறது. இனிவரும் காலங்களில் மனித நுண்ணறிவை கணிசமாக மிஞ்சும் வகையில் (Super Intelligence) அதன் வளர்ச்சி இருக்கும் என நம்பப்படுகிறது.

செயற்கை நுண்ணறிவு இன்றைய கற்பிக்கும் மற்றும் கற்றுக்கொள்ளும் முறையில் மிகப்பெரும் மாற்றத்தை கொண்டுவந்துள்ளது. ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் கற்றலை தனிப்பயனாக்க உதவுகிறது. தனிப்பயனாக்க கற்றல் (Personalized Learning) சிறந்த மாணவர்களை உருவாக்கும். ஒவ்வொரு மாணவர்களுக்கும் அவர்களது தனிப்பட்ட கற்றல் முறை மற்றும் கற்றல் வேகம் ஆகியவற்றிற்கு ஏற்ப கற்றுக்கொள்ள முடியும். புத்திசாலித்தனமான பயிற்சி அமைப்புகள், உதவிகள், தானியங்கி மதிப்பீடுகள் மற்றும் தரப்படுத்துதல் ஆகியவை அறிவு செயல்திறனை அதிகரிக்கும். தெளிவான, குறிப்பான, துல்லியமான தரவுகளை தேவைப்படும் விதத்தில் அதிகமாக மிகத்துல்லியமான நிலையான கருத்துக்களை தெளிவாக கற்றுக்கொள்ள முடிகிறது. கற்கும் போது ஏற்படும் சந்தேகங்களுக்கும், குழப்பங்களுக்கும் மிக எளிதில் விடை காண முடிகிறது.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் மருத்துவத் துறையில் மிகப்பெரும் பங்கினை வகித்து வருகிறது. நோய்களை கண்டறிவதிலும் அதன் தீவிரத்தன்மையை





உணர்த்துவதிலும், நோய்க்கான சிகிட்சை மேற்கொள்வதிலும் உதவுகிறது. மெய்நிகர் மருத்துவ உதவியாளர்கள், நோயாளி மற்றும் நோயின் தன்மையை உணர்ந்து அதற்கேற்றாற் போல் மருந்தின் அளவை கணித்தல், நவீன ரோபோக்கள் மூலம் சிக்கலான அறுவை சிகிட்சைகளை மேற்கொள்ளல் என மருத்துவ துறையின் அனைத்து வகையான பணிகளிலும், நிலைகளிலும் AI தொழில் நுட்பம் உதவி வருகிறது.

விளையாட்டு துறையில் வீரர்களின் செயல்திறனை கணிப்பதற்கும், கண்காணிப்பதற்கும் AI tool - கள் பயன்பாட்டில் உள்ளது. இதை வைத்து எதிரணி வீரர்களின் பலன் மற்றும் பலவீனங்களை அறிந்து கொள்ளவும், அதற்கேற்ப பயிற்சி யுத்திகளை மேற்கொள்ளவும், வீரர்களின் திறன்களை மேம்படுத்தவும், ஒவ்வொரு நிலையிலும் வீரர்களின் செயல் திறனை சூழலோடு தொடர்புபடுத்தி கண்காணிக்கும் வல்லமையை இத்தொழில்நுட்பம் தந்திருக்கிறது.

இன்றைய வர்த்தக துறையிலும் AI-ன் பங்கு மிக முக்கியமானது. பொருட்களின் சந்தை வாய்ப்பினை கணிப்பதில் துவங்கி, செயல்முறை திட்டங்களை வகுத்து, முடிவெடுப்பதிலும், திறனை மேம்படுத்துவதிலும், சரியான நுகர்வோர்களை சரியான நேரத்தில் தொடர்புபடுத்துதல், விளம்பரப்படுத்துதல், நுகர்வோர்களுடைய எதிர்பார்ப்பு என்ன என்பதை கண்டறிதல், குறைகளை கண்டறிந்து நிவர்த்தி செய்ய உதவுதல், தொடர்ந்து கண்காணித்தல் போன்ற அனைத்து வர்த்தக செயல்பாடுகளிலும் சிறப்பான பங்களிப்பினை வழங்கிவருகிறது. மேலும் உலகளாவிய சந்தைபடுத்துதலுக்கும் உதவியாக இருக்கிறது.

AI- தொழில்நுட்பம் இன்று விவசாயம் மற்றும் வேளாண்மை துறையிலும் அரும் பங்காற்றி வருகிறது. வேளாண்மை தொழில் நுட்பத்தில் பல்வேறு வளர்ச்சிகள் கண்டுவரும் இக்காலகட்டத்தில் மாறிவரும் காலநிலைகள் கருத்தில் கொண்டு விவசாயிகள் முந்திய தரவுகளின் அடிப்படையில் எந்த காலகட்டத்தில் எந்த பகுதியில் எதை விளைவிப்பது, சந்தை மதிப்பு எப்படி இருக்கும், மண்வளத்தை ஆய்வு செய்து தேவையான ஊட்டங்களை வழங்குவது, மண் பதப்படுத்துவது துவங்கி, பயிரிடுவது, பராமரிப்பது, உரமிடுவது, நோய்களிலிருந்து பாதுகாப்பது, விளைச்சலை கண்காணிப்பது, தேவையான நீர் பாசன முறைகளை கையாளுவது, அறுவடை செய்வது, சந்தைப்படுத்துவது போன்ற அனைத்து நடவடிக்கைகளிலும் செயற்கை நுண்ணறிவு சிறப்பான பங்களிப்பை வழங்கி வருகிறது.





சிறந்த துணை என்பது உடனிருப்பதோ . . . . உணவளிப்பதோ . . . . உடையளிப்பதோ கிடையாது
எண்ணங்களுக்கும் உணர்வுகளுக்கும் மதிப்பளிப்பது

கால்நடை பராமரிப்பு, கண்காணிப்பு மற்றும் நோய் தாக்குதல் கணிப்பு, காலநிலைக்கேற்ற உணவு முறை மற்றும் ஊட்டம் போன்ற வற்றிலும் திட்டமிட்டு பராமரிக்க உதவுகிறது.


இன்று ஆளில்லா விமானங்களும் அவற்றை திறம்பட இயக்குவதும் திறம்பட செயல்படுத்துவதும் செயற்கை நுண்ணறிவால் சாத்தியமாகியிருக்கிறது. சுயமாக ஓட்டுநர்கள் இல்லாமல் கார்கள் சாலைகளில் செல்லவும் தடைகளை கண்டறிந்து நிகழ்நேரத்தில் முடிவுகள் எடுத்து பாதுகாப்பாக இலக்கினை குறித்த நேரத்தில் அடையவும் AI பயன்படுத்தப்படுகிறது.

நம்முடைய அன்றாட வாழ்வில் கூட மெட்டா (Meta AI), சிரி, கூகிள் உதவியாளர், அலெக்சா போன்ற AI மெய்நிகர் உதவி யாளர்கள் (Personal Assistants) பணிகளை செய்யவும் நினைவூட்டல்களை அமைக்கவும், தகவல்களை வழங்கவும் பயன்படுகிறது. Chat bot-கள் வாடிக்கையாளர் ஆதரவை வழங்குதல், கேள்விகளுக்கு பதிலளித்தல் போன்ற பணிகளை மேற்கொள்கிறது.

மேலும், ஆராய்ச்சி நிறுவனங்களில் தரவுகளை வகைப்படுத்துதல், ஆய்ந்தறிதல், செயல்முறைகளை நடைமுறைப்படுத்துதல், ஆராய்ச்சி முடிவுகளை வகைப்படுத்தி தொகுத்து வழங்குதல் போன்ற பணிகளை இத்தொழில்நுட்பம் வழங்கி வருகிறது. தொழில் துறை நிறுவனங்களில் உபகரணங்களின் செயலிழப்புகளை கண்டறியவும், தானியங்கி செயல்பாடுகளை துல்லியமாக மேற்கொள்ளவும் தொழிற்சாலை செயல்பாடுகளை திட்டமிட்டு செயல்படுத்தவும் AI தொழில்நுட்பம் உதவுகிறது. நாம் அன்றாடம் பயன்படுத்தும் வீட்டு உபகரணங்கள், சாலை போக்குவரத்து வழிகாட்டுதல்கள் என அனைத்திலும் செயற்கை நுண்ணறிவு பயன்படுகிறது.

நாமும் செயற்கை நுண்ணறிவின் பயன்களையும் முக்கியத்துவத்தை உணர்ந்தவர் களாய் அவற்றை முறையாக பயன்படுத்தி நம்மை மேம்படுத்த முயற்சி மேற்கொள்வோம். மாறிவரும் வேகமான தொழில்நுட்ப வளர்ச்சியை கருத்தில் கொண்டு, அதனால் ஏற்படும் சவால்களை எதிர்கொண்டு நம்மையை தகவமைத்துக் கொண்டு செயற்கை நுண்ணறிவை பயன்படுத்துபவர்களாக அதனையே சமூக மாற்றத்தின் கருவியாக, ஆக்கபூர்வமாக பயன்படுத்த முயற்சிப்போம்.

## Rupees Value ₹




**தேடல்**

தேவையானது தேவையற்றது
என்று எதுவும் இல்லை
காலம் அறிந்து தேடுதல்
தேவையானது
காலம் தவறிய தேடுதல்
தேவையற்றது.

**செலவு**

வாழ்வதற்கு செலவு மிக
குறைவு - ஆனால்
அடுத்தவனைப் போல்
வாழ்வதற்குத் தான் செலவு
மிக அதிகம்.

உன்னையே நேசிக்க கற்றுக்கொள் உன்னால் எதையும் சாதிக்க முடியும் உன்னையே நம்பு
உன்னால் முடியாதது எதுவும் இல்லை.

## மிட்ஸ் நிறைவாழ்வு சங்கம்

மிட்ஸ் நிறைவாழ்வு சங்க குழுக்களில் உறுப்பினர்களுக்கு வங்கிக்கடன் வழங்கப்பட்டு வருகிறது. வங்கி அதிகாரிகள் மிட்ஸ் குழுக்களின் கணக்கு புத்தகம் சரிபார்த்தல் செய்கிறார்கள். மேலும் வங்கி கடன் பெற்ற குழுக்களுக்கு மிட்ஸ் அமைப்பாளர்கள் முன்னிலையில் தொகையை வழங்குகிறார்கள்.





## விருட்சம் - நுண்கடன் திட்டம்




மிட்ஸ் நிறுவனத்தில் செயல்படும் கடன் திட்டங்களில் ஒன்றாக விருட்சம் என்ற நுண்கடன் திட்டம் வாயிலாக குழுக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவிக்கரம் நீட்டுகிறது. இத்திட்டத்தில் கடந்த மூன்று மாதங்களாக ரூ. 76,00,000 கடனாக மார்த்தாண்டம், களியக்காவிளை, நாகர்கோவில் பணிமண்டல குழுக்களுக்கு தலா ரூ. 2,00,000 வீதம் 38 குழுக்களில் 152 நபர்களுக்கு தலா ரூ 50,000 வீதம் வழங்கப்பட்டது. கடன் பெற்ற குழுக்களின் உறுப்பினர்கள் மாதந்தோறும் 24 தவணையாக TMB மார்த்தாண்டம், TMB படந்தாலுமூடு மற்றும் IOB நாகர்கோவில் வங்கிகளில் மிட்ஸ் வங்கிக்கணக்கில் கடனைத்திருப்பி செலுத்தி வருகிறார்கள்.

## குடும்ப வளர்ச்சித்திட்டம் (MR & MA)

குடும்ப வளர்ச்சி திட்டத்தின் வழியாக தற்போது 439 குடும்பங்கள் பயன்பெற்று வருகின்றன. அவர்களில் 439 பயனாளிகளுக்கும் 28-07-2025, 22-8-2025 மற்றும் 26-8-2025 ஆகிய தினங்களில் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து வழிகாட்டுதல் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியினை மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் துவங்கிவைத்து திட்டத்தின் நோக்கம் மற்றும் வழிமுறைகள் குறித்தும், பயனாளிகள் திட்டத்திற்கு தகுந்த ஒத்துழைப்பு எவ்வாறு நல்கவேண்டும் என்றும் விளக்கி கூறினார்கள். மிட்ஸ் திட்ட அலுவலர் திரு. ஷாஜன் ஜோசப் அவர்கள் வாழ்த்துரையில் பயனாளிகள் ஒவ்வொருவரும் தாங்கள் தேர்ந்துகொண்ட தொழிலில் சிறந்த கவனத்துடன் செயல்படவும், நல்ல கருத்துக்கள் கூறி ஊக்கமளித்தார்கள். பின்னர் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் திருமதி. வினிதா மற்றும் திருமதி. ஜெசிந்தா ஆகியோர் திட்டத்தில் பயனாளிகளின் முக்கியத்துவம், அவர்கள் பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறைகள், தொழில் துவங்கும் போது கவனிக்க வேண்டியவை ஆகியவை குறித்து தெளிவாக பயனாளிகளுக்கு பயிற்சியளித்தார்கள். பின்னர் பயனாளிகள் தாங்கள் இத்திட்டத்தின் வழியாக பெற்ற நன்மைகளை பகிர்ந்தனர். இந்த பயிற்சியில் மொத்தம் 439 பயனாளிகள் கலந்து கொண்டனர். பயனாளிகளில் சிலர் இத்திட்டம் வாயிலாக தாங்கள் பெற்றுக்கொண்ட அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்கள். அனைவருக்கும் மதிய உணவும் வழங்கப்பட்டது.








## தளிர்கள் உலகம்

12.07.2025 அன்று தளிர்கள் உலகம் திட்டத்தின் மாதாந்திர சிறப்பு பயிற்சி மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டது. தாய்மார்களுக்கு திரு. ஜீவகுமார் அவர்களால் நேர்மறை எண்ணங்கள் என்ற தலைப்பில் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது. இந்த பயிற்சியில் 46 மாணவர்களும், 35 தாய்மார்களும் கலந்துகொண்டனர்.

## விண்ணைத்தொடு திட்டம்



மாற்றத்திற்கான தலைவர்கள் (Leaders for Change) என்ற குழுவின் கலந்துரையாடல் கூட்டம் 18.08.2025 அன்று மறைமாவட்ட குருகுல முதல்வர் மோண்சிஞ்சோர் ஜோஸ் பிறைட் அவர்கள் தலைமையில் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. CRS நிறுவனத்தின் சார்பாக டெல்லி கிளையின் நிர்வாக இயக்குநர் திரு. செந்தில்குமார், ஆலோசகர் அருட்தந்தை செலஸ்டின், CRS சென்னை கிளையிலிருந்து திருமதி. ஜோமி மற்றும் செல்வி. சஞ்சனா ஆகியோர் கலந்துகொண்டனர். மாற்றத்திற்கான தலைவர்களின் குழுக்களை செயல்படுத்தி வரும் 30 பங்குகளிலிருந்து பிரதிநிதிகள் கலந்துகொண்டார்கள்.

மாற்றத்திற்கான தலைவர்கள் குழு உருவாக்கப்பட்டதின் நோக்கம் மற்றும் பயணித்த வழிகள் குறித்து விளக்கக்காட்சி வழியாக பங்கேற்பாளர்களுக்கு நினைவூட்டப்பட்டது. தொடர்ந்து, மிட்ஸ் இயக்குநர் அவர்கள் கலந்துரையாடலின் நோக்கத்தை உறவுகளின் பகிர்வின் கூட்டம் என வர்ணித்தார்கள். மாற்றத்திற்கான தலைவர்கள் என்ற கருத்தை பாராட்டி மார்த்தாண்டம் மறைமாவட்ட குருகுல முதல்வர் நாம் இணைந்து செயல்பட்டால் சமூகத்தில் மாற்றத்தை கொண்டு வர முடியும் என்னும் சிந்தனையை தமது தலைமை உரையில் முன்வைத்தார்.

CRS நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு. செந்தில் குமார் மற்றும் அருட்தந்தை செலஸ்டின் அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள். நான்கு பிரதிநிதிகள் தங்கள் பங்கிலே செயல்படும் மாற்றத்திற்கான தலைவர்கள் என்ற குழுக்களின் செயல்பாடுகள் குறித்து கருத்துகள் மற்றும் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். இறுதியில், பங்கேற்ற பிரதிநிதிகள் அனைவரையும் கௌரவிக்கப்பட்டார்கள்.

ஒட்டுமொத்தமாக, திருச்சபை நமக்கு கற்றுத்தந்த இயேசுவின் பண்புகளை புரிந்து கொண்டு நம்முடைய சமூகத்திலே பாதிக்கப்பட்ட / பாதிப்பு ஏற்படக் கூடிய நிலையிலுள்ள குழந்தைகளை அல்லது குடும்பங்களை அடையாளம் கண்டு, இப்போது மட்டுமல்லாது, எதிர் காலத்திற்கும் பணிபுரிய வேண்டியவர்கள் என்பதைப் புரிந்து, நாம் உருவாக்கியுள்ள குழுக்களை வலுப்படுத்த கேட்டுக்கொள்ளப்பட்டது. காப்பகம் இல்லா குழந்தைகள் உலகம் உருவாக்க அனைவரும் இணைந்து செயல்படுவோம்.



## மிட்ஸ் அறிவுத்திறன் தேர்வு

27.07.2025 அன்று தளிர்கள் உலகம் திட்டத்தின் சார்பாக நடத்தப்பட்டு வரும் மாதாந்திர அறிவுத்திறன் தேர்வு மிட்ஸ் அலுவலகம், தேமானூர், மரியகிரி, நாகர்கோவில் ஆகிய மையங்களில் வைத்து நடைபெற்றது. இந்த தேர்வில் மொத்தம் 111 மாணவ மாணவிகள் கலந்துகொண்டு தேர்வு எழுதினர்.

நேரத்தை வீணாக்குவது என்பது வேண்டாத செயலை செய்வது மட்டுமல்ல,
வேண்டிய செயலை செய்யாமல் இருப்பதும்தான்.

## கோல்பிங்

மிட்ஸ் கோல்பிங் திட்டத்தின் வாயிலாக பல்வேறு வகையான கடனுதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, பசு வளர்த்தல் தொழில் செய்ய கோல்பிங் இந்தியா தலைமை அலுவலகத்திலிருந்து கடனுதவித்திட்டங்கள் வழங்கப்பட்டு, கோல்பிங் குடும்பங்களின் வாழ்வாதாரங்கள் உயர வேண்டும் என்ற தொலைநோக்குப் பார்வையோடு கோல்பிங் குடும்பங்கள் செயல்பட்டு வருகின்றன.

29.07.2025 அன்று கோல்பிங் திட்டத்தின் சார்பாக கோல்பிங் குடும்பங்களில் உள்ள 13 உறுப்பினர்களுக்கு பல்வேறு சிறுதொழில்கள் செய்ய ரூபாய் 13,00,000/- கடன் உதவி வழங்கப்பட்டது.



கோல்பிங் மார்த்தாண்டம் மறை மாவட்டத்தின் செயற்குழு கூட்டம் 2025 ஆகஸ்ட் 14, அன்று காலை 10.30 மணிக்கு இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அடிகளார் தலைமையில் திரு.சசன் குமார் முன்னிலையில் கோல்பிங் பாடல் மற்றும் ஜெபத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. செயலர் திருமதி.மேரி சுதா அவர்களால் அறிக்கை வாசிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது. குடும்பங்களின் 2024-2025 ஆண்டிற்கான தணிக்கை செய்யப்பட்டதன் நிறை, குறை, வளர்ச்சி மற்றும் வீழ்ச்சி ஆகியவற்றை குறித்து விவாதிக்கப்பட்டது. மேலும் பயிற்சிகள், பொதுக்குழு, கோல்பிங் தினம் போன்றவை குறித்தும் விவாதிக்கப்பட்டு, கூட்டம் 12.30 மணிக்கு இனிதே நிறைவுற்றது.

## மரியன் இயக்கம்

மரியன் இயக்க உறுப்பினர்களின் மாதாந்திர கூட்டங்கள் அந்தந்த இடங்களில் வைத்து நடைபெற்றது. சமூதாயத்தில் கைம்பெண்களாக உள்ள மக்கள் சந்திக்கும் சவால்களை, அவர்கள் எவ்விதங்களில் எதிர்கொண்டு வாழ்கிறார்கள் என்பதை குறித்தான ஒரு ஆய்வானது 2025 ஆகஸ்ட் மாதம் 1-ம் நாள் துவங்கி 2025 ஆகஸ்ட் மாதம் 30-ம் நாள் வரையிலும் களியக்காவிளை, மார்த்தாண்டம், நாகர்கோவில் பணி மண்டலத்திற்குட்பட்ட இடங்களிலும் உள்ள கைம்பெண்களை குறித்தான கள ஆய்வு நடை பெற்றது. இதுவரை 987 கைம்பெண்கள் நம் பணித்தளங்களில் உள்ளனர் எனத் தெளிவாகியுள்ளது.





## உலக கைம்பெண்கள் நாள் - சிறப்பு மாநாடு

மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூகப்பணி மையமான மிட்ஸ் நிறுவனத்தில், கைம்பெண் களின் சமூக, பொருளாதார முன்னேற்றத் திற்காக மரியன் இயக்கம் என்ற அமைப்பு சிறப்பான முறையில் இயங்கி வருகிறது. இந்த மரியன் இயக்கமானது உலக கைம்பெண்கள் தினமான 23.06.2025 அன்று காலை 10 மணிக்கு இந்த இயக்கத்தில் உள்ள அனைத்து கைம்பெண்களையும் ஒருங்கிணைத்து, மிட்ஸ் கலை அரங்கத்தில் வைத்து சிறப்பு மாநாடு ஒன்றை நடத்தியது. இந்த இயக்கத்தை மேலும் வலுப்படுத்தவும், கைம்பெண்களின் நலவாழ்விற் காக குரல் கொடுக்கவும் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த கூட்டத்தினை மிட்ஸ் இயக்குநர்

அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் துவக்கி வைத்தார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் கைம்பெண்களின் நலனுக்காக, மிகச்சிறப்பாக இயங்கிவரும் கைகள் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமதி. கார்மல் மேரி மற்றும் களப்பணியாளர் திருமதி. ஆன்லெட் ஆகியோர் கலந்துகொண்டு, கைம்பெண்கள் சந்திக்கும் சமூக, பொருளாதார, கலாச்சார மற்றும் உளவியல் பிரச்சனைகள் குறித்தும் அவற்றிலிருந்து விடுபடும் வழிகள் குறித்தும் விளக்கமளித் தார்கள். பின்னர் கைம்பெண்கள் குழுக்களாக அமர்ந்து, அவர்கள் சமூகத்தில் சந்திக்கும் சவால்கள், சமூக, பொருளாதார, உளவியல் பிரச்சனைகள் குறித்து விவாதித்தார்கள். இறுதியில் மூன்று தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன. அதாவது, அரசின் நலத்திட்ட உதவிகளைப் பெற, கைம்பெண்களுக்கான மேம்பாட்டுத் துறை உருவாக்க அரசினைக் கேட்டு மனு சமர்ப்பிப்பது, குமரி மாவட்டத்தில் கைம்பெண்கள் நலனுக்காக உழைக்கும் நிறுவனங்களுடன் இணைந்து, குமரி மாவட்டத்தில் உள்ள அனைத்து கைம்பெண் களின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காக உழைக்கவேண்டும் எனவும், கைம்பெண்கள் நலனுக்கான மரியன் இயக்கத்தை வலுப்படுத்த, மண்டல மற்றும் மிட்ஸ் அளவிலான நிர்வாகிகளை தேர்ந்தெடுப்பதும், மூன்று வருடத்திற்கான திட்டம் ஒன்றை வடிவமைக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. தொடர்ந்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் மேதகு







கழுவன்திட்டை மிட்ஸ் நிறுவனத்தில் உலக கைம்பெண்கள் தின மாநாடு

★ பிஷப் வின்சென்ட் மார் பவுலோஸ் பங்கேற்பு

வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் கலந்துகொண்டு, நீங்கள் கைம்பெண்கள் அல்ல கைவன்மை உடையவர்கள் என்றும், சமூகத்தில் கணவனை இழந்த பெண்களுக்கு ஒரு தனிக்கவனம் உண்டு என்றும், பெண்கள் வலிமைமிக்கவர் களாக, தன்னம்பிக்கையோடு உழைத்து வாழவேண்டும் என்றும், எந்தவேலையும் தாழ்வானது அல்ல உழைத்து வாழ்வதே உயர்வான வழி என்றும் வாழ்த்தினார்கள்.

கூட்ட இறுதியில், மிட்ஸ் நிறுவனம் சார்பாக புற்றுநோயாளர்களின் வழிகாட்டு தலுக்காக அச்சிடப்பட்ட புற்றுநோய் பற்றிய தகவல்கள், தமிழ்நாடு கன்னியாகுமரி மற்றும் திருவனந்தபுரம் மாவட்டங்களில் உள்ள புற்று நோயாளர் சிகிச்சை மையங்கள், புற்றுநோய் கவனிப்பு மையங்கள், வலிநிவாரணி மற்றும் ஆற்றுப்படுத்தல் சேவை மையங்கள், புற்றுநோய் காப்பீடு ஆகிய தகவல்கள் உள்ளடங்கிய குமரி புற்றுநோய் பராமரிப்பு கையேடு என்ற இதழை ஆயர் அவர்கள் வெளியிட கைகள் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமதி. கார்மல் மேரி அவர்கள் பெற்றுக்கொண்டார்கள். தொடர்ந்து மரியன் இயக்க உறுப்பினர் திருமதி. மினி அனைவருக்கும் நன்றி கூற, நிகழ்வானது இனிதே நிறைவுபெற்றது. இந்த கூட்டத்தில் மிட்ஸ் மண்டல இயக்குநர்கள், மிட்ஸ் பணியாளர்கள், மரியன் இயக்க உறுப்பினர்கள் என மொத்தம் 200-க்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர்.

வரவுக்குள் செலவு செய், வருமானத்திற்குள் வாழப் பழகு.

## மிட்ஸ் எழுவோம் இயக்கம்



11.07.2025 அன்று மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நீரிழிவு நோயின் தன்மையை குறித்தும் அதிலிருந்து எவ்வாறு விடுபட முடியும் என்பதைப் பற்றியும் ஓர் விழிப்புணர்வு நிகழ்வு மிட்ஸ் பணியாளர்கள் மற்றும் தன்னார்வர்லர்களுக்குமாக நடைபெற்றது.

24.07.2025 அன்று எழுவோம் இயக்கம் சார்பாக மிட்ஸ் மற்றும் நாகர்கோவில் கிம்ஸ் மருத்துவமனை இணைந்து நடத்திய இலவச பொது மருத்துவம் மற்றும் புற்றுநோய் கண்டறிதல் முகாம் மஞ்சத்தோப்பு பகுதியில் வைத்து நடைபெற்றது. இந்த முகாமில் அந்த பகுதியை சேர்ந்த 86 நபர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

### கிம்ஸ் மருத்துவ முகாம்

எழுவோம் இயக்கத்தின் சார்பாக நடத்தப்பட்ட மருத்துவ முகாம் 28-08-2025 அன்று காலை 10.00 மணிக்கு விமலபுரம் புனித மரியன்னை ம.சி.க உயர்நிலைப் பள்ளியில் வைத்து நடைபெற்றது.

நாகர்கோவில் கிம்ஸ் மருத்துவமனையின் சிறப்பு மருத்துவர்கள் தலைமையில் நடைபெற்றது. இம்முகாமில் இரத்த பரிசோதனை, இரத்தம் எடுத்தல், மார்பக புற்றுநோய் போன்றவை இலவசமாக பரிசோதனைச் செய்யப்பட்டது. 58 நபர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றார்கள்.





## மிட்ஸ் உறுப்பினர் பாதுகாப்புத்திட்டம் (MIDS MMWS)

மிட்ஸ் உறுப்பினர் பாதுகாப்புத் திட்டத்தின் Core team கூடுகையானது 13-8-2025 அன்று காலை 10.45 மணிக்கு மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. கூட்டத்தில் புதிய மற்றும் புதுப்பித்தல் உறுப்பினர்களை சேர்ப்பது, உறுப்பினர்கள் இறக்கும் பட்சத்தில் வாரிசுதாரர்களுக்கு இறப்புத் தொகை ரூ. 12500 வழங்குவது. மேலும் 2026 ஜனவரி மாதம் முதல் இறந்த நபருக்கு அஞ்சலிக்காக அவரது புகைப்படம் மற்றும் ரூ.300 வாரிசுத்தாரர் செலுத்தி, ஐக்கிய சுடர் இதழில் பிரசுரிக்கப்பட தீர்மானிக்கப்பட்டது. 2026 ஆண்டிற்கான உறுப்பினர் சேர்க்கை படிவமானது 2025 அக்டோபர் மாதத்தில் அனைத்து குழுக்களுக்கும் வழங்கப்பட தீர்மானிக்கப்பட்டது.

## மிட்ஸ் குடும்ப தினம்



09.07.2025 அன்று மிட்ஸ் தினத்தை முன்னிட்டு, மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை தலைமையில் சிறப்பு நன்றி திருப்பலி மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில் ஆயர் மற்றும் மறைமாவட்ட முதன்மைகுரு மோண். ஜோஸ் பிறைட் அவர்களும், மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் மற்றும் மண்டல இயக்குநர்கள் அருட்தந்தை சுனீஸ், அருட்தந்தை ஜோஸ், அருட்தந்தை பிபின் ஆகியோர் கலந்துகொண்டனர். கூட்டத்தில், மிட்ஸ் பணியாளர்கள் தங்கள் பணிவாழ்வின் அனுபவங்களை பகிர்ந்தார்கள். தொடர்ந்து அனைவருக்கும் நினைவுப்பரிசு, தேநீர் மற்றும் மதிய உணவு வழங்கப்பட்டு, கூட்டமானது இனிதே நிறைவுபெற்றது.

உங்கள் சம்பளம் சிறிதாக இருக்கும் போதே ஏதாவது சேமிக்க முயற்சி செய்யுங்கள்
நீங்கள் அதிகம் சம்பாதிக்கத் தொடங்கிய பிறகு சேமிப்பது சாத்தியமற்றது - ஜாக் பென்னி

## உதவித்திட்டங்கள்

01.07.2025 அன்று தளிர்கள் உலகம் திட்டம் சார்பாக All for Life திட்டத்தில் உள்ள 3 பயனாளிகளுக்கு ரூபாய் 19,440/- மற்றும் Förderverein திட்டத்தில் உள்ள ஒரு பயனாளிக்கு ரூபாய் 9450/- சிறப்பு நிதி உதவி வழங்கப்பட்டது.

29.07.2025 அன்று மிட்ஸ் ஜீவன் திட்டத்தின் வழியாக புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 19 நோயாளிகளுக்கு ரூபாய் 95,000/- உதவித்தொகை வழங்கப்பட்டது.

## உதவித்திட்டம் வான்கோழி வளர்ப்பு




மிட்ஸ் நாகர்கோவில் பணி மண்டலத்திற்குட்பட்ட பகுதியில் உள்ள மிட்ஸ் சுயஉதவிக்குழுக்களில் வருவாய் ஈட்டும் தொழிலான வான்கோழி வளர்ப்பு தொழிலைச் செய்வதற்கான பயிற்சியானது 25-08-2025 அன்று மிட்ஸ் மண்டல அலுவலகம் பெருவிளையில் வைத்து பயிற்சி வழங்கப்பட்டது. திருமதி. மஞ்சு கிராத்தூர் குடும்ப வளர்ச்சித்திட்ட பயனாளி தன்னுடைய வான்கோழி வளர்ப்பு அனுபவத்தை பயிற்சி மூலம் பகிர்ந்து கொண்டார்கள். 50 சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது. பயிற்சி பெற்ற நபர்களுக்கு ஆஸ்திரேலிய திரு. லீபெனட் குடும்பம் அவர்கள் உதவியால் 10 வான் கோழிக் குஞ்சுகள் வீதம் 500 வான்கோழிக்குஞ்சுகள் 8-9-2025 அன்று மிட்ஸ் இயக்குநர், திட்ட அலுவலர், திட்ட ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் முன்னிலையில் வழங்கப்பட்டன. வழங்கப்பட்ட வான்கோழிக்குஞ்சுகள் விபரம்

| வ.எண். | கிளஸ்டர் பெயர் | வழங்கப்பட்ட வான்கோழிக் குஞ்சுகள் |
|---|---|---|
| 1. | பூதப்பாண்டி | 310 |
| 2. | அகஸ்தீஸ்வரம் | 10 |
| 3. | நாகர்கோவில் 1 | 60 |
| 4. | நாகர்கோவில் II | 120 |
| | மொத்தம் | 500 |

## ஓண விழா நிகழ்வு



மிட்ஸ் பணியாளர்களுக்கான ஓணப்பண்டிகையை முன்னிட்டு, கொண்டாட்ட நிகழ்வானது 02-09-2025 அன்று மிட்ஸ் அலுவலகத்தில் காலை 10 மணிக்கு அத்தப்பூ போடுதல் நிகழ்வுடன் துவங்கப்பட்டது. மிட்ஸ் இயக்குநர் மற்றும் மிட்ஸ் பணியாளர்கள் அனைவரும் பங்குகொண்டார்கள். மேலும் மனமகிழ்வு போட்டிகள் நடைபெற்றன. மதிய உணவுடன் கொண்டாட்டம் நிறைவுற்றது.

உங்கள் செல்வத்தை அதிகரிக்க இரண்டு வழிகள் உள்ளன. உங்கள் வழிமுறைகளை அதிகரியுங்கள் அல்லது உங்கள் விருப்பங்களைக் குறையுங்கள். இரண்டையும் ஒரே நேரத்தில் செய்வதே சிறந்தது - பெஞ்சமின் பிராங்க்ளின்

## நிதிமேலாண்மை பயிற்சி

கார்ல் குபெல் நிறுவனம் சார்பாக நிதி மேலாண்மை குறித்தான பயிற்சியானது 17-6-2025 முதல் 19-6-2025 வரையிலான நாள்களில் கோயம்புத்தூர் ஆனைகட்டி என்ற இடத்தில் வைத்து நடைபெற்றது. இப்பயிற்சியில் நிறுவனங்கள் நிதியை எவ்வாறு கையாள்வது என்பது குறித்தான கருத்தரங்கம் நடைபெற்றது. நமது மிட்ஸ் நிறுவனத்திலிருந்து மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம், கணக்கர் திருமதி. புஷ்பலதா, மைக்ரோ கிரடிட் ஒருங்கிணைப்பாளர் திரு. ராஜன் (திரு.C. ஜார்ஜ்) ஆகியோர் பங்கெடுத்து அதற்கான சான்றிதழையும் பெற்றுள்ளார்கள். இப்பயிற்சியில் வெவ்வேறு நிறுவனங்களிலிருந்தும் வந்த பொறுப்பாளர்கள் மொத்தம் 23 நபர்கள் கலந்து கொண்டார்கள்.





## வெற்றியின் ரகசியம் . .

- ➢ புத்தகங்களை துணை கொள்
- ➢ உடலுழைப்பை அதிகரி
- ➢ சமூகம் புறக்கணிப்பவற்றை கைவிடு
- ➢ குளிர் தண்ணீரில் குளி
- ➢ கொஞ்சமாய் சாப்பிடு
- ➢ தியானம் கைக்கொள்
- ➢ இரவு உறங்கும் முன் நெடுந்தொலைவு நட
- ➢ உடையில் வெள்ளை நிறத்தைப் பழக்கமாக்கு
- ➢ உணவில் கீரை சேர்த்துக்கொள்
- ➢ எத்தனை வலித்தாலும் சிரிப்பை மறவாதே.
- ➢ ஆத்திரம் அகற்று
- ➢ கேலிக்கு புன்னகை தா
- ➢ கோபத்துக்கு மௌனத்தை கொடு
- ➢ நட்புக்கு நட்பு செய்
- ➢ வேலை சொல்லித் தருபவரிடம் மிகப் பணிவாக இரு
- ➢ அலட்சியப்படுத்தினால் விலகி நில்
- ➢ அன்பு செய்தால் நன்றி சொல்
- ➢ இதமாக பேசு



## தூக்கி வீசும் கறிவேப்பிலையின் சுவை ! ! !

**தேவையான பொருட்கள்:** கறிவேப்பிலை - 1 கப், புளி ஒரு சிறிய எலுமிச்சை அளவு,உப்பு தேவைக்கு, மிளகாய்த்தூள் 2 மேசைக்கரண்டி, கடுகு 1 டீஸ்பூன், வெந்தயம் 1 டீஸ்பூன், உளுந்தம் பருப்பு - 1 டீஸ்பூன், எண்ணெய் 4 மேசைக்கரண்டி, பெருங்காயம் - சிறிதளவு


**செய்முறை**

- ❖ கறிவேப்பிலையை கழுவி நன்கு துடைத்து உலர்த்திக் கொள்ளவும்.
- ❖ வாணலியில் கொஞ்சம் எண்ணெய் விட்டு கறிவேப்பிலையை வறுத்து குளிர விடவும்.
- ❖ வறுத்த கறிவேப்பிலையை புளி சேர்த்து நன்கு அரைத்துக் கொள்ளவும். (சிறிதளவு தண்ணீர் சேர்க்கலாம்)
- ❖ வாணலியில் எண்ணெய் விட்டு கடுகு, உளுந்தம் பருப்பு,வெந்தயம்,பெருங்காயம் போட்டு தாளிக்கவும்.
- ❖ அதில் அரைத்த கறிவேப்பிலை புளி விழுது, உப்பு மிளகாய் தூள் சேர்த்து நன்றாக கிளறவும்.
- ❖ எண்ணெய் மேலே மிதக்கும் வரை நன்கு கொதிக்க விடவும். 4-5 நிமிடங்கள் சிம்மில் வேக விடவும். குளர்ந்ததும் பாட்டிலில் வைத்து சேமிக்கலாம்.

இந்த முறை ஊறுகாய் சாதம், தயிர் சாதம், இட்லி, தோசைக்கு சுவையாக இருக்கும். 8-10 நாள்கள் வரை இதைப் பயன்படுத்தலாம்.

**சுனி V.**, ஒருங்கிணைப்பாளர்

பணக்காரர்கள் நேரத்தில் முதலீடு செய்கிறார்கள். ஏழைகள் பணத்தில் முதலீடு செய்கிறார்கள் _ வாரன் ப?பெட்



## பெயர்விழா வாழ்த்துக்கள்

மிட்ஸ் நிறுவனத்தின் இயக்குநர்
அருட்தந்தை முனைவர் **ஜெறோம்** அவர்களின்
பெயர் கொண்ட விழா 30-09-2025 ஆகும்.
**புனித ஜெறோம்** அடிகளாரின் குணநலன்களோடும்
சமூகப்பணியோடு திருஅவையிலும் தன்னுடைய
தடத்தை பதித்து உண்மை, நேர்மை, தியாகம்,
புதிய தொழில்நுட்ப சிந்தனை, சமூக அக்கறையோடும்,
மிட்ஸ் நிறுவனத்தின் குறிக்கோளோடும்
மக்களை நேரிய பாதையில் வழிநடத்தும்
பாசமிகு இயக்குநர் அவர்களுக்கு
இனிய பெயர்விழா நல்வாழ்த்துக்களை
மிட்ஸ் குடும்பம் சார்பாக தெரிவித்துக் கொள்கிறோம்.
வளர்க உங்கள் சேவை,
பயணியுங்கள் இறைபாதையில் ...



## பணிநிறைவு வாழ்த்துக்கூட்டம் (திருமதி. மேரி பிளாசில்தாள்)

மிட்ஸ் நிறுவனத்தில் 23 ஆண்டுகள் தூய்மைப் பணியாற்றி, பணிநிறைவுபெற்ற திருமதி. F. மேரி பிளாசில்தாள் அவர்களுக்கு வாழ்த்துக் கூட்டமானது 24-06-2025 அன்று 3.30 மணிக்கு மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து இறைவணக்க பாடலுடன் துவங்கப்பட்டது. கூட்டத்திற்கு மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜெறோம் அடிகளார் தலைமையுரையாற்றினார். மிட்ஸ் திட்ட அலுவலர் திரு. ஷாஜன் ஜோசப் வாழ்த்துரை வழங்கினார். அனைத்து பணியாளர்களின் சார்பாக திருமதி. மேரி பிளாசில்தாள் அவர்களுக்கு வாழ்த்துமடல் வழங்கப்பட்டது. மிட்ஸ் சார்பாகவும் அவர்களை கௌரவித்தார்கள்.




பணிநிறைவு
வாழ்த்துக்கள்





திருமதி. F. மேரி பிளாசில்தாள்

## அழகு குறிப்பு



**வீட்டில் உள்ள பொருள்கள் வைத்து முக அழகை பராமரிக்க . . .**

- ➢ காலையில் எழுந்தவுடன் முகத்தில் ஐஸ் தண்ணீர் வைத்து கழுவினால் முகம் பளபளப்பாகும்.
- ➢ செம்பருத்தி இலை, செம்பருத்தி பூ, மருதாணி இலை, கற்றாழை இலை, துளசி இலை ஆகியவற்றை நன்கு அரைத்து தலையில் பூசி வர பேன் தொல்லைகள் மாறும்.
- ➢ தக்காளி, புதினா இலை மற்றும் கேரட் பயன்படுத்தி முகத்தில் பூசினால் முகம் பளிச்சாகும்.

**திருமதி. ஷிஜி**, வரவேற்பாளர்

நீங்கள் எவ்வளவு அதிகமாக கற்றுக் கொள்கிறீர்களோ, அவ்வளவு அதிகமாக சம்பாதிப்பீர்கள் – வாரன் பபெட்




நாம் வாழும் சமுதாயத்தில் அதாவது கிராமப்புற மற்றும் நகர்புறங்களில் பண பட்டுவாடா செய்வதற்கு தனிநபர் கணக்கு வைத்திருப்பது அவசியம். தனிநபர் கணக்கு என்பது வங்கி அல்லது அஞ்சல் அலுவலகத்தில் வைத்திருக்கலாம். காரணம் அரசுத் திட்டங்களுக்கான தொகைகள் மக்களுக்கு சென்றடைதல் என்பது அஞ்சலகம் மற்றும் வங்கிகள் வழியாக தான். மேலும் நவீன மாக்கப்பட்ட உலகில் கிராமப்புற மக்கள் எளிதில் பணபரிவர்த்தனை செய்வது அஞ்சலகங்களில் தான். இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்:

**தபால் அலுவலக ரெக்கரிங் டெபாசிட்**

- ➢ இத்திட்டம் என்பது மாதந்தோறும் சிறு சேமிப்புத் தொகையை சேமித்து, கால முடிவில் பெரிய தொகையாக பெற உதவும் பாதுகாப்பான சேமிப்பு திட்டமாகும்.
- ➢ மாதந்தோறும் 100 ரூபாய் முதல் தொடங்கலாம் அதிகபட்ச வரம்பு இல்லை.
- ➢ முதிர்வு காலம் 5 ஆண்டுகள்.
- ➢ வட்டிவிகிதம் தற்போது ஆண்டிற்கு 6.7% (மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூட்டுவட்டி)
- ➢ ஒரு வருடம் கழித்து டெபாசிட் தொகையின் 50% வரை கடன் பெறலாம்.
- ➢ சிறு முதலீட்டாளர்களுக்கு ஏற்றது. மாத ஊதியம் பெறுபவர்கள், சிறு வணிகர்கள், மாணவர்கள் போன்றவர்களுக்கு இத்திட்டம் சிறந்த பயனளிக்கிறது.
- ➢ பாதுகாப்பான இந்த சேமிப்பு திட்டம் மத்திய அரசின் உத்தரவாதம் உள்ளதால் எந்த அபாயமும் இல்லை.
- ➢ ஒவ்வொரு மாதமும் ஒழுங்காக சேமிக்கும் பழக்கத்தை உருவாக்குகிறது.
- ➢ எளிதாக கணக்கு துவங்கலாம் ஆதார், பான் மற்றும் புகைப்படம் இருந்தால் போதும்.
- ➢ அவசர தேவைக்கு உதவுகிறது. கடன் வசதி மூலம் நிதி நெருக்கடியில் உதவியாக இருக்கும்.

**உதாரணம்:**

- ❊ மாதந்தோறும் ரூபாய் 5000 சேமித்தால் 5 ஆண்டுகளில் ரூபாய் 300000 முதலீடு மற்றும் ரூ. 56830 வட்டியும் சேர்த்து ரூ. 356830 கிடைக்கும்.
- ❊ மாதந்தோறும் ரூபாய் 10000 சேமித்தால் 5 ஆண்டுகளில் ரூபாய் 600000 முதலீடு மற்றும் ரூ. 254272 வட்டியும் சேர்த்து ரூ. 854272 கிடைக்கும்.

இந்த திட்டம் உங்கள் எதிர்கால கல்வி மற்றும் திருமணம், வீடு கட்டுதல், ஒய்வூதியம் போன்ற தேவைகளுக்கு நிதி பாதுகாப்பை அளிக்கிறது. நீங்கள் மாதம் எவ்வளவு சேமிக்க விரும்புகிறீர்களோ அதன்படி கணக்கு துவங்கி பயன்பெற வாழ்த்துக்கள்.

**திருமதி. ஷைலா ராணி,** அமைப்பாளர்

## பொன்மொழிகள்

- ஒரு நிமிடம் தாமதமாகச் செல்வதை விட மூன்று மணி நேரம் முன்கூட்டியே செல்வது சிறந்தது **- வில்லியம் ஷேக்ஸ்பியர்**
- நீங்கள் தாமதிக்கலாம்; ஆனால் நேரம் தாமதிக்காது - **பெஞ்சமின் பிராங்க்ளின்**
- நாம் நேரத்தை ஒரு கருவியாக பயன்படுத்த வேண்டும். ஊன்றுகோலாக அல்ல - **ஜான் எப். கென்னடி**
- பொறுமையும், நேரமும் இரண்டு சக்தி வாய்ந்த போர் வீரர்கள் - **லியோ டால்ஸ்டாய்**
- வறுமை வருவது செல்வம் குறைவதால் அல்ல ஆசைகள் அதிகரிப்பதால் தான் - **பிளேட்டோ**

எல்லோருடைய வாழ்க்கையும் வரலாறு ஆவதில்லை. வரலாறாய் ஆனவர்கள் தனக்காக வாழ்ந்ததில்லை.

# மிட்ஸின் தொழிற்பயிற்சி வாயிலாக அடுத்தடுத்த படிகளுக்கு செல்லும் திருமதி. சஜிதாமேரி அவர்களின் பயிற்சி - பணி அனுபவம்

**குடும்ப பின்னணி**



| | | |
|---|---|---|
| பெயர் | : | K.சஜிதா மேரி |
| கணவர் பெயர் | : | திரு.ராஜேஷ் |
| கணவரின் வேலை | : | தச்சுவேலை |
| குழந்தைகள் | : | அபினேஷ், அகிலேஷ் |
| குழுப்பெயர் | : | மிட்ஸ் பண்ணீட்டுவிளை II |
| கிளஸ்டர் | : | கிராத்தூர் |
| மண்டலம் | : | களியக்காவிளை |

**பணி அனுபவம்**

நான் Vestige என்ற Multi Marketing -ல் பணிச்செய்தேன். அப்பொழுது எனக்கு உடல்நிலை அடிக்கடி சரியில்லாத நிலையில் சரியாக வேலைக்கு செல்ல முடியவில்லை. இதனால் அங்கு செல்லும் வேலைக்கு முற்றுப்புள்ளி ஆயிற்று. பல சிந்தனைகளுடன் இருந்த நாள்களில் மிட்ஸ் நிறுவனத்தில் ஓர் அரிய வாய்ப்பு.

**பயிற்சியில் பங்கேற்பு**

- Skin training (தோல் சார்ந்த பயிற்சி) Shali Beauty Academy - Monday Market
- Cosmetology & Beauty Clinic
- Tattoo Art
- Nail Art Course
- Training in Beautician course (teaching field)

**என் கனவு**

எனக்கு சிறு வயதிலிருந்தே பேஷன் டிசைனிங் மற்றும் அழகு கலை படிக்க மிகுந்த ஆசை. எனது பெற்றோர் இந்த படிப்பிற்கு எனக்கு ஆதரவு அளிக்கவில்லை. ஆகையால் எனது கனவு அத்தோடு நின்றது.

**தொழிற்பயிற்சிக்கு ஓர் அழைப்பு**

மிட்ஸ் நிறுவனத்தின் புதிய முயற்சியால் கிராமத்தில் வாழும் மக்களும் நகரத்தில் வாழும் மக்களை போல் அழகுக் கலை படிக்கவேண்டும் என்பதை கருத்திற் கொண்டு பின்குளம் பகுதியில் வைத்து 15 நாள்கள் அழகு கலைப்பயிற்சி நடைபெற ஒழுங்கு செய்தது. இப்பயிற்சியில் நான் தவறாமல் கலந்துகொண்டு முறையாக அடிப்படை அழகுக்கலைப் பயிற்சி பெற்றேன். இதன் பின்னணியில் அடுத்தடுத்த பயிற்சிகளில் பங்கேற்றேன்.

**கடனுதவி**

நான் மிட்ஸிலிருந்து பயிற்சி முடித்தவுடன் குழுவிலிருந்து கடன் எடுத்து, அழகுக் கலைக்கு தேவையான உபகரணங்கள் வாங்கினேன். மீண்டும் குழுக்கடன் Rs.100000/-, விருட்சம் திட்டக்கடன் Rs. 50000/- ஆக கடன் தொகை பெற்றேன்..

**அழகுக் கலை கடை அமைத்த விதம்**

என்னுடைய வீடு ஒரு மாடியை கொண்ட கான்கிரீட் வீடு. வீட்டின் மேல் பகுதியில் கூரை மற்றும் சுவர்களை Tin & ஆஸ்பெஸ்டாஸ் வைத்து அழகு கலை கடை துவங்கினேன். கொஞ்சம் வாடிக்கையாளர்கள் வருகை தந்தார்கள். என்னுடைய வீடு சாலையிலிருந்து உட்பகுதியில் உள்ளதால் வாடிக்கையாளர்கள் வருகைதர சிரமமாக இருந்தது. இதனால் சாலையின் பக்கத்தில் Parlour துவங்க தீர்மானித்தேன். அதன்படி 14-02-2025 அன்று கிராத்தூர் ஆலயத்தின் பக்கத்தில் SAJI BEAUTY CLINIC & COSMETOLOGY என்ற பெயரில் அழகுக் கலை கடை துவங்கியுள்ளேன். நான் Bridal Makup - க்கும் செல்வேன்.

**நான் தொழில் செய்ததால் . . .**

- என்னுடைய வாழ்வில் தொழில் செய்வதை நினைத்து மகிழ்ச்சியாகவும் பெருமையாகவும் இருக்கிறது.
- கடை வாடகை மற்றும் EB Bill போன்ற செலவுகள் போக மாதம் ரூ. 8000 முதல் ரூ. 10000 வரை எனக்கு சராசரி வருமானமாக கிடைக்கிறது.
- வீட்டிலும், குடும்பத்திலும், சமூகத்திலும் என்னுடைய வாழ்விலும் நிறைய மாற்றங்கள் நிகழ்ந்தன.
- பிள்ளைகளுக்கு கல்வி வளர்ச்சிக்கான செலவீனங்களுக்கு உதவியாக இருக்கிறது.
- கணவரும் பிள்ளைகளும் தொழில் செய்ய உறுதுணையாக இருக்கிறார்கள்.
- கணவருக்கு பணத்தேவைகளின் இக்கட்டான சூழலில் பணஉதவி செய்ய முடிகிறது.

**நன்றி**

நான் மிட்ஸ் பன்னிட்டுவிளை - II சுயஉதவி குழுவில் உறுப்பினரானேன். 2019-ல் குழுவில் பொருளரானேன். மேலும் மிட்ஸ் குழு பொறுப்பாளர்களுக்கான பயிற்சிகள் வாயிலாக என்னுடைய திறமைகளை வளர்த்துக்கொள்ள உதவியாக இருந்த மிட்ஸ் இயக்குநர், மிட்ஸ் திட்ட அலுவலர், திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் அனைத்து துறை ஒருங்கிணைப்பாளர்களுக்கும் நன்றி கூறிக் கொள்கிறேன். மிட்ஸ் நிறுவனம் வாயிலாக பயிற்சி வழங்கியதால் மட்டுமே முன்னேற்றம் அடைய முடிந்தது. உதவி செய்தவர்களுக்கு நன்றிகளுடன் !!!

தொகுத்தவர்:
**திருமதி. ஷீஜா,** அமைப்பாளர்

நாம் நம் நேரத்தை செலவிடும் விதம், நாம் யார் என்பதை வரையறுக்கிறது - ஜோனாதன் எஸ்ட்ரின்

## வெள்ளிவிழா வாழ்த்துகளுடன் பயணம் என்றும் இனிதே தொடர்ந்திடட்டும்.

## மருதங்காவிளை குழு, கிராத்தூர் கிளஸ்டர்

குழு துவங்கிய நாள் : 25-11-1999

குழு உறுப்பினர் பெயர்கள்

திருமதி. T. அல்போன்சா, திருமதி. K. மெர்லின் ஷீஜா, திருமதி. G. சுனிதா குமாரி, திருமதி. T. ஆக்னஸ், திருமதி. T. மேரிலதா, திருமதி. C. ஓமனா, திருமதி. T. மல்லிகா, திருமதி. A. புஷ்பம், திருமதி. R. வசந்தா, திருமதி. R. புஷ்பம், திருமதி. T. மேரி சுஜா, திருமதி. S.S. அனுமோள், திருமதி. V. வல்சலா ஜோர்ஜ், திருமதி. T.P. விபிஷா, திருமதி. S.S. ஷெர்லின், திருமதி. P. சுனி, திருமதி. A. ரெஜிதா, திருமதி. M. ஜெனிபா, திருமதி. C. சுனி, திருமதி.T.K. ஏஞ்சல் பாப்பா



**25 வருடங்களுடன் மிட்ஸ் சமூக சேவை நிறுவனத்துடன் மருதங்காவிளை குழு, கிராத்தூர் கிளஸ்டர் பயணிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். எங்களுடைய தனிப்பட்ட மற்றும் சமூக வாழ்வில் ஏற்படுத்திய விழிப்புணர்வு மாற்றங்களை நினைத்து மிட்ஸ் நிறுவனத்தின் பொறுப்பாளர்களுக்கு வாழ்த்துக்களும் நன்றிகளும்.**






எப்போதும் செலவு போக மீதியை சேமிக்காதே. சேமிப்பு போக மீதியை செலவு செய்.



# வெற்றியின் சிகரத்தை நோக்கி ...

## திருமதி. மஞ்சு

கிராத்தூர் பகுதியில் உள்ள மருதங்காவிளை என்ற சிறிய ஊரைச் சேர்ந்த பெண்மணி திருமதி. கே. மஞ்சு. தற்போது 45 வயதாகும் இவர் 52 வயதாகும் தனது கணவர் திரு. பா. ரசலையன் மற்றும் மகளுடன் வசித்து வருகிறார். இவரது கணவர் கூலிவேலை பார்த்து வந்தார். இவர்களுக்கு நெடுநாட்களாக குழந்தை இல்லாமல் இருந்து, பல வருடங்களுக்குப் பின்னர் ஒரு மகள் பிறந்தாள். அவள் பெயர் ஆர்.எம். ஷைலு. ஏழாம் வகுப்பு படித்துவரும் ஷைலுவிற்கு 12 வயது. திருமதி. மஞ்சு 17.08.2016 அன்று மிட்ஸ் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக சேர்ந்தார். தன் கணவர் சம்பாதிக்கும் சொற்ப வருமானத்தில் குடும்ப தேவை களையும் நிவர்த்தி செய்து சுயஉதவி குழுவிலும் சேமித்து வந்தார். ஓரளவிற்கு சீராக சென்று கொண்டிருந்த இவர்களது குடும்ப வாழ்வில் திடீரென ஒரு தடுமாற்றம் ஏற்பட்டது. மஞ்சுவின் கணவருக்கு ஏற்பட்ட உடல்நலக் குறைவால் அவரால் வேலைக்கு செல்ல இயலவில்லை. சேமித்த செல்வமெல்லாம் கணவரின் மருத்துவ செலவால் கரைந்துபோனது.

மிகவும் சோர்வடைந்து கலக்கத்தில் இருந்த சமயம் சுய உதவி குழுவின் வழிகாட்டுதலில் மிட்ஸ் குடும்ப வளர்ச்சி திட்டத்தில் பயனாளியாக சேரந்தார். வான்கோழி வளர்ப்பில் அனுபவம் உள்ள திருமதி. மஞ்சு முதல் வருடம் கிடைத்த ரூபாய் 6,869/- தொகையை வைத்து 14 கோழிகள் வாங்கி வான்கோழி வளர்ப்பை துவங்கினார். தீவனத்திற்காக அதிக தொகை செலவிடாமல், குறைந்த அளவில் தீவனம் வாங்கிவிட்டு அத்துடன் காய்கறி கழிவுகள், புற்கள், இலைகள் போன்ற பொருட்களை கோழி களுக்கு கொடுத்தார். அத்துடன் அவைகளுக்கு சரியான மருந்துகளையும் தவறாமல் கொடுத்ததன் விளைவாக இவரது கோழிகள் வெகுவிரைவில் வளர்ந்து இவருக்கு இரட்டிப்பான வருமானத்தை கொடுத்தது. இந்த கோழிகளிலிருந்து கிடைத்த முட்டைகளும், இறைச்சியும் இவரது வருமானத்தை





அதிகரிக்கச் செய்தன. அதனை கண்டு மகிழ்ந்த மஞ்சு வான்கோழி முட்டைகளை நாட்டு கோழி களுக்கு அடை வைத்து புதிய வான் கோழிகளை அதிகரிக்க செய்தார். இரண்டாவது முறை குடும்ப வளர்ச்சி திட்டம் வழியாக கிடைத்த ரூபாய் 24,150/- உதவித் தொகையை வைத்து 18 கோழிகளும், அவற்றை எடையிட்டு விற்பதற்காக ஒரு தராசும் வாங்கி தனது தொழிலை மேம்படுத்தினார். இவரது கணவரும் இவருக்கு உறுதுணையாக இருந்து வருகிறார். இவருக்கு கிடைக்கும் வருமானத்தில் ஒரு பகுதியை தனது மகளுக்காக செல்வ மகள் சேமிப்பு திட்டத்தில் சேமித்து வருகிறார். குடும்ப செலவுகள் போக தனது மகளின் எதிர்காலத்துக்காகவும் சேமித்து வரும் திருமதி. மஞ்சு பிற பெண்களுக்கு எடுத்துக்காட்டாக திகழ்கிறார்.

ஒரு அறை கொண்ட சிறிய வீட்டில் வசித்துவரும் மஞ்சுவிற்கு ஒரு நல்ல வீடு கட்டவேண்டும் என்பது கனவாக உள்ளது. அதற்கு முதல் படியாக சிறுக சிறுக சேமித்து வீட்டிற்கான அஸ்திவாரம் அமைத்துள்ளார். அரசின் வீட்டுத் திட்டத்திற்காக விண்ணப்பித்தும் உள்ளார். தனக்கு கிடைத்த சிறிய உதவியை பெரிதாக மதித்து விடாமுயற்சியுடனும், ஆர்வத்துடனும் செயல்பட்டு இன்று தனது வெற்றி அனுபவத்தை பலருக்கு பகிர்ந்தும், புதிதாக வான்கோழி வளர்க்க விரும்பும் மக்களுக்கு வான்கோழி வளர்ப்பு வழிமுறைகளை எடுத்துக்கூறி அவர்களை ஊக்கப்படுத்தி, அனைவருக்கும் எடுத்துக்காட்டாக விளங்கும் திருமதி. மஞ்சு தனக்கு உதவிசெய்யும் கனடா நாட்டை சேர்ந்த Ms. Pamela அவர்களுக்கும், மிட்ஸ் நிறுவனத்திற்கும் தனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துள்ளார். இவரது கனவுகள் நனவாகவும், இவரது சிறுதொழில் பெரிய அளவில் வளர்ந்து ஒரு மிகப்பெரிய தொழில் முனைவோராக மாறவும் மிட்ஸ் நிறுவனம் இவரை வாழ்த்துகிறது.

தொகுத்தவர் : திருமதி. ஜெசீந்தா, ஒருங்கிணைப்பாளர்





உண்மையான சொத்து நோய் இல்லாத உடலும் வேதனை இல்லாத மனமும் தான்.

# குறுக்கெழுத்துப்போட்டி

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | 2 | | | | | 3 |
| | | 4 | 5 | | | | | | |
| 6 | 7 | | 8 | | | 9 | | 10 | |
| | | | | | 11 | | | | |
| | | | | | | | 12 | | 13 |
| | | 14 | | 15 | | | | | 16 |
| | | | | | 17 | | 18 | | 19 |
| | 20 | | | 21 | | | | | 22 |
| | 23 | | | 24 | | | | | |
| | | | 25 | | | | | 26 | |

**இடமிருந்து வலம்**

1. இந்தியாவின் முதலாவது மகளிர் ரயில்வே ஸ்டேசன் எது? (4)
5. மனித கம்ப்யூட்டர் என்று அழைக்கப்படும் நிபுணர் யார்? (7)
8. இந்திய தேசியக் கொடியில் உள்ள நிறங்கள் ஆரஞ்சு, ......., பச்சை ஆகும். (3)
20. ஆரஞ்சு நிற காய்கறி . . . . . . ஆகும்? (3)
23. இந்தியாவில் . . . . . . . மாநிலம் மிகவும் அதிக கல்வியறிவு விகிதத்தைக் கொண்டுள்ளது? (4)
24. இந்தியாவின் மணற்கிண்ணம் என்று அழைக்கப்படும் மாநிலம் எது? (5)

**மேலிருந்து கீழ்**

2. மிகவும் பயன்படுத்தப்படும் தேடு பொறி எது?(3)
6. வாகனங்கள் பழுதுபார்க்கும் பணிமனைகளில் வாகனங்களை உயர்த்த எந்த விதியின் அடிப்படையில் இயங்கும் நீரியல் உயர்த்திகள் பயன்படுத்தப்படுகின்றன. (6)
7. இந்தியாவின் தேசிய மரம் எது? (5)
8. ஏழை மக்களின் பசு என்று அழைக்கப்படும் கால்நடை எது? (4)
9. காப்பீட்டு துறையின் தந்தை யார்? (7)
10. உலகின் மிக உயரமான மனிதன் யார்? (7)
11. காகிதம் முதலில் எந்த நாட்டினரால் கண்டுபிடிக்கப்பட்டது? (2)
22. நமது நாட்டில் உள்ள மிகப்பெரிய அரண்மனை எது? (3)
16. செம்மொழி தமிழ்க்கழகம் எங்கு உள்ளது (3)
18. தமிழகத்தின் மாநில உணவு எது? (7)
19. சூரியனைப் பற்றி ஆய்வு செய்துவரும் விண்வெளி ஓடம்? (2)
25. உலகத்தில் மிக அதிக சுற்றுலாப் பயணிகளைப் பெறும் நாடு எது? (4)
26. இந்தியாவின் IT நகரம் என்று அழைக்கப்படும் நகரம் எது? (5)

**வலமிருந்து இடம்**

3. இந்தியாவின் விளையாட்டு மைதானம் என்றழைக்கப்படுவது எது? (4)
4. உலகிலேயே நீர் மின்சாரத்தை அதிக அளவில் உற்பத்தி செய்யும் நாடு? (3)

**கீழிருந்து மேல்**

12. இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் பெயர் என்ன? (4)
13. இந்தியாவில் ரூபாயை வெளியிடும் நிறுவனம் எது? (3)
14. மிக விரைவாக ஓடக்கூடிய விலங்கு எது? (3)
15. கண்ணின் நிறம் எந்த பகுதியால் தீர்மானிக்கப்படுகிறது? (3)
17. தாதுக்களின் கலவையே . . . . . . ஆகும் (3)
21. முதன்மை இயற்கை வளம் எது ? (2)

குறிப்பு :

சரியான பதில் எழுதும் நபருக்கு குலுக்கல் முறையில் தேர்வுசெய்து தக்க பரிசு வழங்கப்படும், விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : **2025 நவம்பர் 11.** தாமதித்த விடைகள் நிராகரிக்கப்படும். புத்தகத்தின் இந்த பக்கத்தின் விடைகளை எழுதி கத்தரித்து தபாலில் அல்லது அமைப்பாளர் வழியாக அனுப்பவும். நகல் அனுப்பினால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

முகவரி : ஆசிரியர், ஐக்கியச்சுடர், மிட்ஸ் அலுவலகம், இடைவிளாகம், கழுவன்திட்டை, குழித்துறை அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம் - 629 163, தமிழ்நாடு.

"பணம் செலுத்தும் போது கணக்கு வைத்து செலவழிக்கவும். பணம் சம்பாதிப்பது கடினம், செலவழிப்பது சுலபம்."

## படித்ததில் பிடித்தது

வெற்றிலை பாக்கு போட்டால் அது கிராமம்
பீடா போட்டால் அதுநகரம்

பச்சை குத்தினால் கிராமம்
டாட்டூ பொட்டுக் கொண்டால் நகரம்

மருதாணி வைத்துக் கொண்டால் கிராமம்
மெஹந்தி போட்டா நகரம்

மஞ்சள் தண்ணி ஊத்தி கொண்டாடினா கிராமம்
இரசாயன பொடி தூவி ஹோலி கொண்டாடினா நகரம்

கையில் மஞ்சப்பை வைத்திருந்தால் கிராமம்
பாலித்தீன் பை வைத்திருந்தால் நகரம்

கிழிந்த ஆடையை தைத்து போட்டால் கிராமம்
நல்ல ஆடையை கிழித்துப் போட்டால் நகரம்

உதவிக்கு மிதிவண்டி இருந்தால் கிராமம்
உடம்பை குறைக்க மிதிவண்டி இருந்தால் நகரம்

நாய் வீட்டை காவல் காத்தால் அது கிராமம்
நாயை வீட்டில் வைத்து காவல்காத்தால் அது நகரம்

சாதத்தில் தண்ணீர் ஊற்றி பழைய சோறு
சாப்பிட்டா அது கிராமம்
அமேசான்ல ஆர்டர் பண்ணி பழைய சோறு
சாப்பிட்டா அது நகரம்

***நீங்கள் கிராமமா? அல்லது நகரமா?***



**வாழ்க்கை நமக்கு கொடுத்த மாபெரும் முதலீடு நேரம் மட்டுமே. பயன்படுத்துவதும் வீணடிப்பதும் அவரவர் கைகளில்தான் உள்ளது!**

சென்ற மாத ஆங்கிலச் சொல்லுக்கு நிகரான தமிழ் சொல் எழுதுக போட்டியில் பங்கு பெற்ற அனைவருக்கும் மிட்ஸ் சார்பாக வாழ்த்துக்கள்:

- R.மேகலா, ஆதிச்சவிளாகம் குழு, ஆதிச்சவிளாகம் கிளஸ்டர், களியக்காவிளை
- C.வினிதா, தீபாஞ்சான்விளை குழு, ஆற்றூர் கிளஸ்டர், மார்த்தாண்டம்
- P.மேழ்சி, சாத்தன்கோடு குழு, நடைக்காவு கிளஸ்டர், களியக்காவிளை
- S.சரஸ்வதி, மிட்ஸ் வாணியன்விளை II குழு, குழித்துறை கிளஸ்டர், மார்த்தாண்டம்
- S.ஷீலா, மிட்ஸ் தெறம்புதட்டுவிளை குழு, ஆற்றூர் கிளஸ்டர், மார்த்தாண்டம்

சென்ற மாத ஆங்கிலச் சொல்லுக்கு நிகரன தமிழ் சொல் எழுதுக போட்டியில் வெற்றி பெற்றவர்:

- S.சரஸ்வதி, மிட்ஸ் வாணியன்விளை II குழு, குழித்துறை கிளஸ்டர், மார்த்தாண்டம்

சென்ற மாத ஆங்கிலச் சொல்லுக்கு நிகரான தமிழ் சொல் எழுதுக போட்டியின் விடைகள்:

1. வளர்பிறை
2. ரூபாய்த்தாள்
3. நறுமணச்சுவை
4. சறுக்கு வண்டி
5. கைப்பெட்டி
6. அரைப்பான், கரைப்பான்
7. மழை பாதுகாப்பு ஆடை
8. முகவரிச்சீட்டு
9. மேம்பாலம்
10. பயிற்சிப் புத்தகம்
11. இழை
12. தொடர்தல்
13. மரம்
14. சிறப்பு அங்காடி
15. நடைபயண உதவி ஊர்தி
16. உள்ளங்கால்
17. வேப்பமரம்
18. மணத்தக்காளிக்கீரை
19. உள்ளங்கை
20. காடை

### வாசகர் கவனத்திற்கு

மிட்ஸ் ஐக்கிய சுடர் இதழில் தங்களின் படைப்புகள் வரவேற்கப்படுகின்றன. மேலும் இவ்விதழில் தங்களின் விளம்பரங்கள் வெளியிட விரும்பினால், அதற்கான விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**விளம்பரம்**

**இதழின் கடைசிப் பக்கம்**
முழுப்பக்கத்திற்கு கட்டணம் (கலர்) Rs.2500
அரைப்பக்கத்திற்கு கட்டணம் (கலர்) Rs.1250

**இதழின் முதல் பக்கத்தின் உள்பகுதிக்கு**
முழுப்பக்கத்திற்கு கட்டணம் (கலர்) Rs.2000

**இதழின் கடைசி பக்கத்தின் உட்பக்கம்**
அரைப்பக்கத்திற்கு கட்டணம் (கலர்) Rs.750
முழுப்பக்கத்திற்கு கட்டணம் (கலர்) Rs.1500

**பிறந்தநாள் மற்றும் திருமண வாழ்த்துகள்**
காற்பக்க கட்டணம் Rs.250
அரைப்பக்கத்திற்கு கட்டணம் Rs.500
முழுப்பக்கத்திற்கு கட்டணம் Rs.1000

விளம்பரங்கள் வெளியிட விரும்புவர்கள் மிட்ஸ் அலுவலகத்தை அணுகுமாறு கேட்டுக்கொள்கிறோம். மேலும் தங்களின் சொந்த படைப்புகள் மற்றும் விமர்சனங்களை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**மிட்ஸ் அலுவலகம்**
இடைவிளாகம் - கழுவன்திட்டை, குழித்துறை அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம் - 629 163
Email:midsmarthandam@gmail.com Website:mids.org.in
Ph : 263390, 295690

"நேரத்தை நிர்வகிப்பவர் வெற்றியை நிர்வகிக்கிறார்."

*Best Wishes from*

# UNITED INDIA INSURANCE CO.LTD.

**Divisional Office : Marthandam**

यूनाइटेड इंडिया
UNITED INDIA

**K. Regukumar**
**Chief Advisor**

LIC
भारतीय जीवन बीमा निगम
LIFE INSURANCE CORPORATION OF INDIA

Contact us

**94867 02088 | 99945 02088**

STAR Health Insurance
Personal & Caring
The Health Insurance *Specialist*

regukumar12@gmail.com
regukumarportal@gmail.com

Portal Office : TVM Bus Stop
Opp., Azhagiya Mandapam,
Ph: 04651 - 291195, Mob : 7598462088
Near RTO Office, Kozhiporvilai
Ph : 04651 - 295188 Mob : 75984 72088

சனி மற்றும் ஞாயிறு
ஆகிய விடுமுறை
நாட்களிலும் ஆன்லைன்
மூலம் இன்சூரன்ஸ்
செய்து தரப்படும்.



*Best Wishes from......*

**V. MURUGAN**
Proprietor

Cell : 96004 86277
94435 83067
94442 43787

# POPULAR HYDRAULIS

**2/2A, Main Road, Pammam, Marthandam (P.O)**
**Kanyakumari Dt. - 629 165.**

**E-mail : popularhydraulis@gmail.com**



## Alternative Spares & Service

**ALL TYPES OF HITACHI, JCB, CATERPILLAR, EARTHMOVING SPARES & SERVICES**